# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 43-ம் இலக்கம்



# 23-ம் அருளப்ப பாப்பரசர் திருமுடி சூடினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## குருவானவரும் குருத்துவ மாணவரும்

வண. ஜேம்ஸ் லெலென் சுவாமியார் சமீபத்திலே தமதுகுருத்துவ 60-ம் வருட யூபிலிவிழாவைக் கொண்டாடினர். இவர் பரீஸ்மாநகரிலுள்ள நோட்றேடாம் ஆசனக்கோவிலில் அப்போது குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றபோது குருத்துவ மாணவர்ஒருவர் அவர்முன்பாக முழந்தாட்படியிட்டு அவருடைய ஆசீர்வாதத்தைக்கேட்டுநின்றார். அப்போது சுவாமியார் அந்தக் குருத்துவ மாணவருக்குத் தமது ஆசீர்வாதத்தை அருளியதோடு இரண்டொருபுத்திமதிகளும் கூறினர். "நீர் ஒருகுருவாக வரவிருந்தால் அதற்குத் தகுதிவாய்ந்த ஓர் நல்லவராயிரும்; அன்றேல் உலகத்திலேயே இருந்துவிடும்" எனப் புத்தி கற்பித்தார். இந்தக் குருத்துவ மாணவர்தான் இன்று கருதினல்மார் திருச்சங்கத்தின் தலைவராக விளங்கும் கருதினல் திசறுன் ஆண்டவர். 85 வதுடையவரான வண. லெலென் சுவாமியார் ஐக்கிய அமெரிக்கதேச கொவிங்ரன் மேற்றிராசனத்தின் அதி விருத்தாப்பிய குருப்பிரசாதியாவர்.

---

## சீமாட்டியான கத்தோலிக்க பாட்டியார்

இங்கிலாந்திலே கிறேற்பில்லிங் எனுமிடத்தில் வசித்துவருகின்ற லேடி வினிபிறிட் எல்வெஸ் சீமாட்டி அன்று புதன்கிழமை தனது 90வதுபிறந்தபெருநாளைக் கொண்டாடியபோது, சீவந்தராயிருக்கும் அவருடைய புதல்வர்கள் ஐவரும், புதல்விகள் இருவரும் சமுகமானர்கள். அவர்மனையிலே அவரின் 19 பேரப்பிள்ளைகளுக்கும், 10 பீட்டப்பிள்ளைகளுக்கும் இடவசதி இல்லாததால் பிள்ளைகள் மாத்திரமே பிறந்த பெருநாளில் கலந்துகொண்டார்கள். 90 வயதுடையவராயிருந்தும் சீமாட்டியான இந்தப்பாட்டியார் காலையில் நேரத்துடன் துயிலொழிந்து தினமும் கோவில் சென்று நாட்பூசைகண்டு வருகிறார். இந்த விழாவாலே பல வருடங்களாக ஒருவர்முகம் ஒருவர் காணுது தூரவிருந்துவந்த சகோதரர்கள் ஐவரும் ஒருங்கே சந்திக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இவர்களில் வண. றுடல்வ் எல்வெஸ் சுவாமியார் இவ்வருடம் குருப்பட்டம் பெற்றுக்கொண்டார். இவரின் இளையதமையனர் ஒக்ஸ்வோட் சர்வகலாசாலையிலே கத்தோலிக்க மாணவர்களின் விசாரணைக் குரவராய் இருந்துவருகின்ற மொன்சிஞ். வலென்ரின் எல்வெஸ் சுவாமியார். ஏனைய மூவருள்ளும் ஒருவர், உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. எல்வெஸ். மற்றொருவர், பிரபல சிற்பியும், மோல்த்தா நைற்வீரர்களின் பிரித்தானிய தலைவருமான கை. எல்வெஸ். இன்னொருவர் பிரதிமைப்படங்களுக்கு வர்ணம்தீட்டுவதில் பெயர்பெற்றவரான திரு. சைமன் எல்வெஸ். ஐவரிலும் இரண்டாவது உலகயுத்தத்தில் லெவ்ரினன்ட்-கேர்னல் வரிசையைப் பெருத ஒரேயொருவர் மொன்சிஞ். வலென்ரின் எல்வெஸ் சுவாமியாரே.

---

## கண்ணீர்சிந்திய மாதா சுரூபம்

சிசிலிதீவிலே சைறுக்குஸ்நகரிலுள்ள கண்ணீர்சிந்திய மாதா திருசேத்திரத்தைச் சென்றவருடம் 50,000 யாத்திரிகர்கள் தரிசித்திருக்கின்றார்கள். இந்த மாதாசுரூபத்தின்முன்பாக எந்தவேளையும் மெழுகுவர்த்திகள் எரிந்தவண்ணமும், அதன்பாதங்களிலே நறுமலர்கள் சாத்தப்பட்டவண்ணமுமாய் இருக்கிறது. அதன்பின்புறமாகவுள்ள சுவரானது குணமடைந்த நோயாளிகள் விட்டுப்போன கக்கதண்டங்கள், வார்கள், பிரம்புகள், மற்றும் இருதயங்கள், ஏனைய மனித உறுப்புகளைப்போன்ற வெள்ளியாற்செய்தநேர்த்திக்காணிக்கைகளாலே நிறைந்துபோயிருக்கின்றது. குருவானவர் ஒருவர் காலைநேரம்முழுவதும் சமுகமாயிருந்து பாவசங்கீர்த்தனம் கேட்பதிலும், திவ்வியநன்மை வழங்குவதிலும் அலுவலாயிருந்துவருகின்றார். அடிக்கடி இத்திருசேத்திரத்தில் திவ்வியபூசை நிறைவேறி வருகிறது. அது இருந்துவரும் பகுதியிலுள்ள சம்பளம்குறைந்த தொழிலாளர்கள் முன்னர் சைறுக்குஸ்நகரின் மாபெரும் கம்யூனிஸ்த அரணாய் இருந்துவந்தார்கள். ஆனல், கண்ணீர்சிந்திய மாதாவின் அருளால் அவர்களெல்லாம் மனந்திரும்பித் தற்போது உத்தம கத்தோலிக்கராய் ஒழுகிவருகின்றார்கள்.

---

## காலஞ்சென்ற கருதினல்

தாம் அதிகமாகநேசித்து, அத்துணைநன்றாகச் சேவைசெய்துவந்த 12-ம் பத்திநாதபாப்பரசர் மரணித்துச் சிலதினங்களின் பின் தமதுமரணத்தாலே அவரின்பாதையைப் பின்தொடர்ந்தார் கருதினல் செல்ஸோ கொஸ்தாந்தினி ஆண்டவர். மரிக்கும்போது இவர் 82 வயதுஉடையவராயிருந்தார். சீனவிலே கத்தோலிக்கதிருச்சபையைப்பற்றிய சம்பவமோ, அல்லது விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தைப்பற்றிய சம்பவமோ, அல்லது திருச்சபையில் சுதேசகலை விருத்திபற்றிய சம்பவமோ எங்காவது சொல்லப்படும் போதெல்லாம் கருதினல் கொஸ்தாந்தினிஆண்டவரின் நாமம் தடித்த எழுத்துகளில் பொறிக்கப்படும். ஏனெனில், இவர் சீனதேச முதலாவது அப்போஸ்தலிக்கஸ்தானபதியாய் இருந்தவர். இவர் அங்கிருந்த காலத்தில்தான் மேற்றிராணித்துவ அதிகார வரிசை ஏற்படுத்தப்படலாயிற்று. 1935-ம் ஆண்டுமுதல் இவர் விசுவாசப்பரப்புதல்திருச்சங்கத்தின் காரியதரிசியாக இருந்துவரலானர். சுதேசகுருமாரை ஆக்கும் விஷயமாய் இவர் எடுத்துக்கொண்ட பிரயாசை பெரிதும் பாராட்டத்தக்கது. இவரின் மரணமானது திருச்சபைக்கு — விசேஷமாய் அவரது இருதயத்துக்கு என்றுமே அதிகம்நெருங்கியதாய் இருந்துவந்த மிஷனரிய உலகத்துக்குப் பெரும் நஷ்டமாகும்.

---

## கண்பார்வை அடைந்த கன்னியாஸ்திரி

தென்னிந்தியாவிலே கேரளநாட்டில் கார்மேல் மூன்றாம் சபையைச்சேர்ந்த சங். செலீன் கன்னியாஸ்திரி மூன்று ஆண்டுகளுக்குமுன் கண்பார்வையை முற்றும் இழந்தாள். மேற்கொண்டு ஒன்றும் செய்வதற்கில்லைஎன்று இரு பிரபல கண் வைத்தியர்கள் அவளைக் கைவிட்டனர். அச்சமயம் கனடாதேச மொண்றியல் நகரிலே கடின நோய்வாய்ப்பட்டு விரைவில் ஒருபெரும் சத்திரசிகிச்சை செய்துகொள்ள வேண்டியநிலையிலிருந்த திருமதி சால்லி ஜேம்ஸ் என்றபெண்மணி கேரளநாட்டின் முன்சொன்ன செலீன் கன்னியாஸ்திரிஇருந்த மடத்துக் கன்னியர்களுக்குக் கடிதம் எழுதித் தனக்காக மன்றாடும்படி கேட்டுக்கொண்டாள். அம்மடத்துக் கன்னியாஸ்திரிமார் நான்கு மாதகாலம் உருக்கமாக மன்றாடி வந்தனர். நான்காவது மாத இறுதியில் அவர்களுக்குத் திடீரென 500 டலர் — அதாவது சுமார் 2,350ரூபா தபாலில் வந்து சேர்ந்தது. அதோடு வந்த கடிதம் அத்தொகையின் மர்மத்தை விளக்கிற்று. தனக்கு ஏற்பட்டிருந்தவியாதி மாயமாய் மறைந்ததாகவும், தனது சத்திரசிகிச்சைக்காகத் தான் சேர்த்துவைத்திருந்த 500 டலரைத் தனக்காக மன்றாடிக்கொண்ட கன்னியாஸ்திரிமாருக்குத் தான் அனுப்பிவைப்பதாகவும் திருமதி சால்லி ஜேம்ஸ் விளக்கம் கொடுத்திருந்தாள். இந்தப்பணத்தைக் கொண்டு கேரள நாட்டிலிருந்து சங். செலீன், சங் சோபி, சங். பெர்னடைன் கன்னியாஸ்திரிகள் ஆகியமூவரும் ஐக்கிய அமெரிக்க தேசஞ்சென்று, அங்குள்ள சர்வகலாசாலைகளில் உயர்தர படிப்பு முடித்துப் பட்டங்கள்பல பெற்று வருகின்றனர். அதுமட்டுமல்ல, சங். செலீன்கன்னியாஸ்திரி கலிபோனிய மருத்துவசாலையில் கண்சிகிச்சைக்குச் சென்று, மற்றொருவரின் கண்பகுதிகள் பொருத்தப்பெற்று இப்பொழுது நன்றாகப் பார்க்கக்கூடிய நிலையிலிருக்கின்றாள் எனத் தகவல் கிடைத்துள்ளது.

## இளவாலை, கல்லூரிஅதிபர் தினம்

அன்றுசனிக்கிழமை அர்ச். என்றியரசர்கல்லூரிக்கு ஒருநன்னாள். அன்று காலைஆதவனும ஆனந்தமுற்றவன் போல் தனதுபொற்கதிர்களை அள்ளி வீசிப் பொலிவுடன தோன்றினன். தென்றற்காற்று மெல்லெனவீசி அற்றைமலர்களை அலர்த்திநின்றது. நாண் மலர்கள்பலிபீடத்தைச்சூழ்ந்து அழகுபடுத்தின. கல்லூரியும் துவசதோரணங்களாலும, விருதுகொடிகளாலும் தேசோமயமாய் இலங்கியது. முகமலர்வுடன மாணவர்களும், ஆசிரியர்களும் கல்லூரிச்சிற்றாலயத்தில் குழுமினர். அங்கே 7-30மணிக்குக் கல்லூரி அதிபர் வண. L. A. சிங்கராயர் O. M. I.; M. A. சுவாமியவர்கள் பலிபீடமிவர்ந்து திவ்வியபூசை நிறைவேற்றிநிற்க, நூற்றுக்கணக்கானோர் திருவிருந்தருந்தித் அதிபர்சுவாமிகளுக்காக மன்றாடினர்கள்.

9மணியானதும் கல்லூரியில் பேராரவாரம. ஒலிபெருக்கி வானைப்பிளந்தது. இன்னிசைப்பாக்களை இசைத்துநின்றது. ஆசிரியரும், மாணவரும் அணியணியாகநின்று அதிபர்சுவாமிகளை வரவேற்றனர். சாரணச்சிறுவர் வரிசையாக வழிவகுத்துநின்று வாழ்த்துக்கூறி மரியாதைசெலுத்தினர். சுவாமிகளின் மார்பில் தண்மலர்மாலை தவழ்ந்துகொண்டிருந்தது. அவரதுமுகமலர்வு அவையோரை அரவணைத்துநின்றது. மாணவர்குழாத்தின்வாழ்த்துப்பாக்கள் பரவசமளித்தன. மாணவர் தலைவன் வாழ்த்துப்பத்திரம் படித்துநின்றார். ஆசிரியர்தலைவர் அதிபரின் அளப்பருந்தொண்டைப் பாராட்டிப் பேசினர். அதிபரவர்களும் விடையிறுத்து ஆசிகூறிமுடித்தார்.

அதிபர்தினம் நானாவித பந்தைய விளையாட்டுகளின் விழாவாகவிளங்கியது முதன்முதல் அதிபரவர்களுடன் 'பாற்மின்ரன்'போட்டி, அதனையடுத்து அவரது தாகசாந்திஉபசாரணை. இவற்றையெல்லாம் வரவேற்றுக் கார்மேகத்தின்பூமாரி மாணவருக்கு மகிழ்ச்சியைக்கொடுத்தது. மேலும் மாணவரிடையே கரபந்தாட்டப்போட்டி யாவரையுங்கவர்ந்தது. ஆசிரியரிடையே 'ரெனிஸ்'விளையாட்டு ஆனந்தமூட்டியது. மற்றும், 'மேசைரெனிஸ்' போட்டியும் விழாவைச்சிறப்பித்தது.

மாலை3மணிக்கெல்லாம் மாணவர்கள் அதிபரைநாடினர். உதைபந்தாட்டம் மிகுந்தஉற்சாகமாக நடைபெற்றது. ஈற்றில், இச்சுபதினத்துக்கு முடிசூட்டுவிழா ஆரம்பமானது. பன்னூற்றுக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும்கூடித் தோட்டோபசாரணையில் குதூகலத்துடன் பங்குபற்றும்வேளை பார்ப்போரையெல்லாம் பிரமிக்கத்தக்க பாவனையுடைப்போட்டி இடம்பெற்றது. பிச்சைக்காரனின் பரிதாபகோலம் எல்லோரையும் இரங்கவைத்தது. கடைசியாக மாணவர்களால் ஓரிருநாட்களுக்குள்ளே சமயோசிதமாக ஒழுங்குசெய்த "என் தங்கை" என்னும் ஒருசிறுநாடகம் மறக்கமுடியாத எழுச்சியையீந்தது. வந்தோரின் மனத்தைத் தன்வசப்படுத்தியது. ஆசிரியர்களின் விருந்துபசாரணையும் அதிபர்தினத்தைச் சுபதினமாக்கியதுடன் அதிபர்தினம் இனிதாகநிறைவேறலாயிற்று. அதிபர்வாழ்க! கல்லூரிவாழ்க!

—நிருபர்.

---

● 12-ம்பத்திநாதபாப்பரசரின் மரணத்தையிட்டு அனுதாபம்தெரிவித்து, அவர்மரணித்து மூன்றுதினங்களுக்கிடையில் அதாவது, ஐப்பசி21-ந் திகதிக்கிடையில் உலகமுழுவதிலுமிருந்து 10,000தந்திகளுக்குமேல் வத்திக்கானுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக வத்திக்கான்இராச்சிய மந்திரிகாரியாலயம் அறிவித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ST. PATRICK'S COLLEGE, JAFFNA.**

Entrance Test for 1959 admissions will be held on Saturday, 15th. November, 1958 at 9-00 a. m.

Applications must reach the office before 12-11-58.

S. N. Arulnesan, O.M.I.
*Rector.*

சம்பத்திரிசியார்கல்லூரி, யாழ்ப்பாணம்

1959-ம்ஆண்டு பாடசாலையில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு வருகிற 15–11–58 சனிக்கிழமைகாலை 9மணிக்கு, பிரவேசப்பரீட்சை நடைபெறும் விண்ணப்பப் பத்திரங்கள் 12–11–58–க்குமுன் கந்தோருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ச. நீ. அருள்நேசன், ஒ. எம். ஐ.,
கல்லூரி அதிபர்.


## சாந்தியின் அஞ்சலராம்
# 12-ம் பத்திநாதர்

எழுதியவர்: — நிர்மலன் —

உலகின் நாத்திகக்கொள்கைகளை எதிர்த்துப்போர்புரியக் கடவுள் காலத்திற்குக்காலம் பல உத்தமர்களை இவ்வையத்திற்கு அனுப்பியிருக்கிறார். போர்முகில்கள் அடர்ந்துகிடந்த இவ்வுலகிற்குச் சாந்தியின் அஞ்சலராக அமைந்தார் 12-ம்பத்திநாதர். அவரது அன்பின் குரலொலி அகிலஉலக மக்களனைவரையும் சமாதானத்துறையை நாடும்படி அழைத்தது. அக்குரலொலி போர் முழக்கத்தைவிடப் பலமாகஒலித்தது. ஆட்சிபுரிந்துவரும் ஏனைய நாடுகளின் பெரியார்களையும் அவர் நல்வழிநடாத்தி வந்தார். நல்லஆயனைப்போன்று காணுமற்போனஆடுகளைத் தேடினார். உலகயுத்தத்தினால் அல்லலுற்ற மக்களையும், பொதுவுடைமை நாடுகளில் துயரப்படுவோரையும் ஓர்தாயைப்போல் தேற்றினார். அமைதியின் அரசராம் யேசுவின்போதகத்தை முழுஉலகிற்கும் போதிக்கமுயற்சித்தார்.

மாசித்திங்கள் 1939-ம்ஆண்டு 11-ம்பத்திநாதர் காலஞ்சென்றபின் ஒருபுதியபாப்பரசரைத் தெரிவுசெய்துகொள்ளுமாறு கருதினால்மார் ஒன்றுகூடினர். அத்தெரிவில் எயுஜினியோ மரியா கிசெப்பே ஜியோவன்னி பச்செல்லிகருதினால்ஆண்டவருக்கு 61 வாக்குகள்கிடைத்தன. கூடிய வாக்குரிமைகள் கிடைத்தமையால் அவர்பாப்பரசராகத்தெரிவுசெய்துகொள்ளப்பட்டார். இப்பதவியை ஏற்றுக்கொள்ளுகிறீரா என்று கேட்டபோது "இது கடவுள்சித்தமெனத் தோன்றுகின்றமையால் நான் ஏற்றுக்கொள்கின்றேன். 12-ம்பத்திநாதர் என்றநாமத்தினால் என்னைஅழையுங்கள்"என்று பதில்அளித்தார். புதியபாப்பரசரைத் தெரிவுசெய்யக் கருதினால்மார்கூடியபோது, "நமதுஎதிர்காலநிலை எவ்வாறெனில், 11-ம்பத்திநாதரைப் பின் தொடர்ந்து வருகிறவர் ஒருவீரனாகவோ, அல்லது ஓர்அர்ச்சிய சிஷ்டவராகவோ இருக்கவேண்டும்"என்று பரீஸ்நகர கருதினால் மொழிந்தார். இந்தக்கருதினால் கூறியவாறு திருச்சபை மிகவும் அல்லலுற்றகாலத்தில்12-ம்பத்திநாதர் மனத்திடனுடன் ஆட்சிசெய்து மங்காவீரனென்றும், தமதுநாளாந்த பரித்தியாக, செபம்நிறைந்த, முன்மாதிரிகைமிக்கவாழ்வினால் ஓர்உத்தம பரிசுத்தர்என்றும் நிரூபித்துள்ளார்.

இவர் திருச்சபையின் 262-ம் பாப்பரசர். 1899-ம்ஆண்டு சித்திரைத்திங்கள் 2-ம்திகதி மேற்றிராசனகுருவாக அபிஷேகம்பண்ணப்பட்டார். 18வருடகால குருசேவையின்பின் 1917-ம்ஆண்டு ஐப்பசித்திங்கள் 13-ம்நாள் மேற்றிராணியாராக நியமனஞ்செய்யப்பட்டார். அத்துடன் இவர் பவேரியாவின் தானாதிபதியாகச் சென்றார். தமதுமேன்மைமிக்க சேவையின் நிமித்தம் 1929-ம் ஆண்டு இவர் கருதினால் பட்டத்திற்கு உயர்த்தப்பட்டார்.

11-ம்பத்திநாதபாப்பானவர் கருதினால் எயுஜினியோ பச்செல்லியின் அருஞ்சேவையினை மிகவும் உயர்வாகக் கருதினார். அவரைப்பற்றித் தமது மரணத்திற்கு முன்பு பின்வருமாறு கூறினார். "நம்மோடு ஒத்துழைத்தவராம் கருதினால்பச்செல்லியின் ஆற்றலும், பரந்தநோக்கமும் காரணமாக நம்மைப்பின்தொடர்ந்துவர மும்முறையும் பாத்திரமானவரென்று அவரை நமதுகருதினால்மாரின்பொறுப்பில் ஒப்படைக்கின்றோம்"

11-ம்பத்திநாதரின் கூற்றுக்கிணங்க, 12-ம்பத்திநாதரின் ஆற்றலும், பண்புமிக்க விரிந்தநோக்கமும் அவர்திருச்சபையை ஆண்டுவந்த 19வருடகாலத்திலே அகிலஉலகிற்கும் தெளிவாயின. சரித்திரத்திலே வேறெந்தப் பாப்பானவரையும்விட அநேக உலககருமங்களையும், இடங்களையும் அறிந்தவர் 12-ம்பத்திநாதர். இவர் பிரான்ஸ், பெல்ஜியம் பிரித்தானியா, ஜேர்மனி, அமெரிக்கா, ஆர்ஜென்ரினா எனும்நாடுகளிலே பிரயாணம்செய்திருக்கிறார். 12-ம்பத்திநாதர் சொற்பொழிவுஆற்றுவதில் மிகுந்ததிறமையுள்ளவர். அவரது அறிவின் அணைப்பில் சிந்தித்துச் சீர்பார்க்கக்கூடிய அநேக எண்ணங்கள் உள்ளடங்கின. அவரைச் சந்திக்கவந்தோர் எத்துறையைச் சேர்ந்தோராயினும்சரி, அவர்களது தொழிலின் கடமையைப்பற்றிச் சிலவார்த்தைகள்தானும் சொல்லக்கூடிய [illegible] இருந்தார். இத்தாலி, பிரான்சு, ஆங்கிலம், ஜேர்மன், இலத்தீன், இஸ்பானிய, போர்த்துகீஸ் எனும் ஏழுமொழிகளில் திறம்படப்பேசும் ஆற்றலும் அவருக்கிருந்தது. தமதுஅன்பின்குரல் அநேகரை அடையவேண்டி வத்திக்கானில் ஒருவானொலி நிலையத்தை ஸ்தாபித்துவைத்தார்.

(வளரும்)

## 23-ம் அருளப்ப பாப்பரசர்
# சமாதானத்தை ஆசிக்கிறவர்

"அவர் சமாதானத்தை ஆசிக்கும் ஓர்மனுஷர். காலப்போக்கிலே நிறைவுபெறும் முன்னேற்றத்தில் நம்பிக்கையுள்ளவர். வன்சொல்லும், கோபமொழியும் அவர்போக்கிற்கு அப்பாற்பட்டவைகள். நரகம், திருச்சபைக்குப் புறம்பாக்குவதுபோன்ற பதங்களையும், பொதுவுடைமை என்பனபோலும் கடூர மொழிகளையும் தவிர்க்கக்கூடுமாகில் தவிர்த்துவிடுபவர். அவரை இடதுசாரியென்றோ, வலதுசாரியென்றோ வர்ணித்துக்கூறமுடியாது. இது அவருடைய பண்பாட்டுக்குப் பொருத்தமற்றது. பலவந்தமும், எதிர்ப்பும் முன்னேற்றத்திற்கு உதவும்படி சமாதானமாய் ஒன்றித்திருக்கச்செய்ய வேண்டுமென எண்ணும்ஓர் இராசதந்திரியாவர்."

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் கருதினால்மாரின் திருக்கூட்டத்துக்குக் கருதினால் றொங்கல்லி ஆண்டவர் புறப்படுமுன் அவருடைய காரியதரிசியான சுவாமியார் நிருபர்களுக்குப் பேட்டியளித்தபொழுது இவ்விதம் புதிய பாப்பரசரை வர்ணித்துக் கூறினார். "அவர் பெருஇருதயம் படைத்த ஓர்மனுஷர்"—அதாவது மிகுந்த தயாளமுடையவர் என்று மற்றோர் குருசிரேஷ்டர் கூறினார்.

இந்தத் தேர்தல் திருக்கூட்டம் கருதினால் றொங்கல்லி ஆண்டவர் வெனிஸ் மாநகரின் அழகிய கால்வாய்களையும், ஏரிகளையும் ஏறக்குறைய நிச்சயமாகவே திரும்ப ஒருபோதும் காணமாட்டார் என்பதையே கருதியது.

புதிய பாப்பரசர் அதிமேற்றிராணியாராயிருந்து ஞான மேய்ப்பருக்குரிய அனுபவஞானம் பெற்றவர். பால்க்கன் நாடுகளிலும், மத்திய கிழக்குநாடுகளிலும் இருபது ஆண்டுகளாகப் பாப்பரசரின் பிரதிநிதியாயிருந்து இராசதந்திர அனுபவமுடையவர். 1953-ம் ஆண்டு கருதினாலாகவும், வெனிஸ் மாநகரின் பத்திறியாக்குவாகவும் நியமனம் பெறுமுன் மிகவும் அனுகூலமாகப் பணியாற்றும் பாப்பரசரின் ஸ்தானிகராகப் பரீஸ்நகரிலே ஸ்தானம் வகித்து வந்தார்.

இராசதந்திர மதியூகத்தாலும், பக்குவமிகுந்த தமது பண்பாடுகளாலும் அந்நகரிலே அவர் ஸ்தானிகராயிருந்த காலத்தில் தமது காரிய திறமையைப் பகிரங்கமாகக் காண்பித்து வந்தார். அதனால், பிரான்ஸிய தலைநகரில் பிரஸ்தாபம் பெற்ற பிரமுகர்களில் ஒருவராய் விளங்கினார். அவரிலே சதாகாணப்பட்ட நகைச்சுவைதேங்கும் ஹாஸ்யப்பேச்சுகள் வரவேற்புவைபவங்களில் தனிச்சிறப்பு அளிப்பனவாயிருக்கும். அங்கே அவர் சோஷலிஸ்த பிரதமருடையவும், பிரான்ஸிய குடியரசுத்தலைவர் எம். வின்சென்ற் ஒறியோவுடையவும் ஆப்த நண்பராய் விளங்கியிருந்தார்.

பரீஸ்நகரிலே ஸ்தானிகராயிருந்தகாலத்தில் பதவிவகித்திருந்த பிரான்ஸிய பிரதமர்கள் எல்லாருக்கும் 1953-ம் ஆண்டு அவர் ஒரு பிரியாவிடை விருந்து அளித்தபோது அவருக்கு மனமுவந்து கூறப்பெற்ற பாராட்டுரைகளில் ஒன்றைப் பழமைக் கட்சியைச் சார்ந்த எட்வாட்ஹேறியோ வழங்கினார். இவரைப் பிரபுத்துவம் அஞ்சிப்பின்னிடச் செய்யாது. நிர்வாகத்துறையில் "எல்லாவற்றையும் பார்; அவைகளில் அதிகமானவற்றைக் கவனியாதே; சொற்பமாகத் திருத்து" என்பதுவே அவரது இலட்சியம். அவரின் விருதுவாக்கியம் "அமைச்சலும், சமாதானமும்" என்பதே. இந்த விருதுவாக்கியத்தை 16-ம் நூற்றுண்டிலிருந்த இத்தாலிய பெருமகன் சீஸர் பறோனியஸ் என்பவரிடமிருந்து அவர் கற்றுக்கொண்டார். இந்தப் பெருமகன் இந்தச்சுலோகத்தை அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்திலுள்ள முதலாவது பாப்பானவரான இராயப்பர் சுரூபத்தின் பாதத்தடியில் முழந்தாளிட்டு நாள்தோறும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொள்ளும் வழக்கமுடையவராயிருந்தார்.

குறுகிப் பருத்ததோற்றம். நரைதிரைகொண்ட தலைமயிர்; வயதால்கூனிய புஜம். 76வயசுடைய குருசிரேஷ்டர். அவர் 1956-ம் ஆண்டு பழைய சோஷலிஸ்தரான பியெற்றோ நென்னி என்பவருடன் கிறீஸ்துவ ஜனநாயக கட்சியினர் உடன்பாட்டுக்கு வரவேண்டுமெனத் தூண்டிய இளம் கத்தோலிக்க சேவாசங்கத் தலைவர்களைக் கண்டித்தபொழுது அவர் பெரும் பிரக்கியாதி பெறலானார். ஆயினும், அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அவர் அரசியலில் சமரசக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர் என்றே கூறுகின்றனர்.

கிராமவாசி ஒருவரின் புதல்வரான இவர் அரசாங்க வரவேற்பு விழாக்களிலும் சரி, மிக எளிமையான மக்களைச் சந்திப்பதிலுஞ்சரி எவரோடுமே நட்பாகப் பழகிக் கொள்வார். வெனிஸ் நகரிலுள்ள கால்வாய்களிலே படகிற்செல்லும் போது படகோட்டிகளுடன் எத்துணைசரளமாகப்பேசி அவர்களுக்கு எத்தகைய மதிப்பு அளிப்பாரோ அதேவித மதிப்பைத்தான் எந்தநாட்டின் பிரதமராயிருந்தாலும் அவரிடமிருந்து பெறமுடியும். சிரித்துப் பேசி எவரையும் தம்பால் வசீகரிக்கும் புதிய பாப்பரசர் பல்லாண்டு வாழ்க!

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகைமாதம்

பொதுக்கருத்து: அப்போஸ்தலத்துவத்தில் பங்குபற்றி இல்லறவாசிகள் நாளாடைவிலே அதிகமதிகமாக ஆன்மீகவளர்ச்சி பெறுவதற்காக வேண்டிக்கொள்வது.

வேதபோதககருத்து: லத்தீன் அமெரிக்கர் விசுவாசத்தையும், ஒழுக்கத்தையும் அழித்துவிடஎழும் ஆபத்துகளை அங்குள்ள கத்தோலிக்கஆடவர்கள் திடமுடன்எதிர்ப்பதற்காக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு

கார்த்திகைமாதம் 6-ந் திகதி

## பரிசுத்த பாப்பரசர்

படங்கள், பத்திரிகைகள் வாயிலாய் உலகசமாச்சாரங்களை அறிகிறோம். அரசர்கள் அரசியல்வாதிகளையும், முதலாளிகள் தொழிலாளரையும், அரசதூதர் அழகுஇராணிகளையும் அறிமுகஞ் செய்துவைக்கின்றன பத்திரிகைகள். இவைகள் சாதாரண வாழ்க்கை நிகழ்ச்சிகள். ஆனால், உலகில் மிகமேம்பட்ட ஒருவரையும் — அலங்கார உடையணிந்து ஆலயத்தின் மேல்மாடியிலிருந்து ஆசியளிக்கும் பாவனையாய்க் கரங்களை உயர்த்திநிற்கும் ஒரு வயோதிகரையும் எமது கண்முன் கொண்டுவந்து கருத்தைக் கவர்கின்றன தினத்தாள்கள்.

இவர்தான் பாப்பரசர் என அறியப்படும் பரிசுத்த பிதா. இவர் தற்காலத்தவருக்கு ஓர் அபூர்வ மனிதரே. இவர் வசிக்கும்மாளிகை, இவரைச் சூழ்ந்திருப்போர் அணிந்திருக்கும் உடைபாவனை கழிந்துபோன ஓர் காலத்தைக் காட்டுகின்றன. அரசர்கள் உலகிலிருந்து அடியோடு அழிந்துவிடும் நிலைமையிலிருக்க, இவரோ உலகின் மிகப் பழைய இராசாதிபத்தியத்தைக் குறிக்கிறவராகிறார். திறை செலுத்தும்நாடுகளிலும், நிரந்தர யுத்தசைனியங்களிலுமே தங்கள் வலிமை தங்கியுள்ளனவென்று அரசாங்கங்கள் அறைகூவிநிற்க, இவரோ சொற்ப ஏக்கர்களை இராச்சியமாகவும், யுத்தத்துக்கு உபயோகமற்ற ஈட்டியேந்திய வீரரைக் கௌரவபட்டாளமாகவும் கொண்டிருக்கிறார்.

எனினும் பரிசுத்தபிதா வலிமையுடையவர். உலகமக்களில் ஐந்திலொருபங்கினரின் ஞானத்தலைவரும், வழிகாட்டியுமாய் இருக்கிறார். மேற்குநாகரீகத்தைத்தந்த மதக்கோட்பாட்டின் காவலர் இவரே. முன்னர் இவரிடமாக இருந்தவர்கள் பலமுறை அந்நாகரீகத்தைப் பாதுகாத்துப் பேணியிருக்கின்றனர். அதேநாகரீகம் இன்னொருகொள்கையின் அறைகூவலால் ஆபத்தானநிலையில் இருக்கின்ற இந்த வேளை, இக்கொள்கைப்போரின் தளபதியாக இவரைக் கிழக்கும், மேற்கும் நோக்குகின்றன. உக்கிர சூறாவளியையும் நெஞ்சு கொடுத்து அஞ்சியோடச் செய்யக்கூடியது இவரது தலைமையே என உலகம்உணருகிறது.

அற்பஆயுதபலம். ஆனால், மாபெருந்தொகையான மக்களின் மனத்தை ஆள்பவர். இந்தவிபரீதத்தை விளங்கிக்கொள்ளாதவர்கள் பாப்பரசரின்ஸ்தானத்தைப் பலவிதமாய் நோக்குகின்றனர். விசுவாசிகளாகிய எமக்குப் பாப்பரசரின் சிறப்பு என்ன? பாருலகு கண்கண்ட கிறீஸ்து. சம்பேதுருவானவரின் பதிலாளி. தமது மந்தையில் மலையளவு அன்பு கொண்டஆயர்.

கத்தோலிக்கதிருச்சபையைச் சாராதவர்கட்குப் பாப்பரசரின் ஸ்தானம் இருவிசேடங்களைக் கொண்டதாகத் தோற்றமளிக்கும். பாப்பரசர் அனைத்துலகிற்கும் பொருந்துவதான ஞானத்தைக்கூறும் பெரியகுரு; உலகமக்கள் அனைவருக்கும் அன்பு காட்டும் பொதுப்பிதா என்பனவாகும்.

சம்பேதுருவானவர்மகா தேவாலய சதுக்கத்திலே, பொற்சிம்மாசனத்தில் வீற்றிருந்து, அங்கு குழுமியிருக்கும் மக்கள் தலைகளுக்குமேல் சுமக்கப்பெற்று, பாப்பரசர் பவனிவரும்போது "பாப்பரசர்நீடூழிவாழ்க" எனும் ஆனந்தக்கூச்சல் அவரை வரவேற்கும். கொந்தளிக்கும் கடல்அலைகள் கற்பாறைக்கரையில் மோதிஇரைந்து இழிவதுபோன்றது அந்தக்கூச்சல். பார்த்திருப்போரின் காதுகள் செவிடுபடச் சென்றுஇடிக்கும் அவ்வாழ்த்தொலி. இதற்குக் காரணம் மிளிரும்பட்டுடை அணிந்த ஓர்உத்தமர் என்பதல்ல, இப்பாரில் கிறீஸ்துநாதரின் பதிலாளி என்பதே. கிறிஸ்துநாதரின் அதிகாரத்துடன்படிப்பித்து முழுத்திருச்சபையையும் ஆண்டளித்து வருபவர்என்றே கிறீஸ்துவமக்கள் பாப்பரசரை மதிக்கின்றனர். அவர்மனிதராயினும் கடவுளின் அதிகாரத்தைக்கொண்டவர்.

பாப்பரசரின்அதிகாரம் சரித்திரத்தையோ, அரசியல்மாற்றத்தையோ, எந்தமனிதஉதவியையோ சார்ந்தது அல்ல. கிறீஸ்துநாதரின் திருவாக்கே அதற்கு ஆதாரம். "நீ இராயாயிருக்கிறாய்; இந்த இராயின்மேல் என்திருச்சபையைக் கட்டுவேன்; நரகவாசல்கள் (தத்துவம்) அதைச்செயிக்காது" என்றார் கிறீஸ்துநாதர் ஓர் ஏழைக் கலிலேய செம்படவனுக்கு. வேதம்கூறும் இவ்வாக்குடன், "இதோ எந்நாளும் உலகமுடிவுவரை உங்களுடன்கூட நாம் இருக்கிறோம்" என்ற கிறீஸ்துநாதரின் அச்சாரவாக்கும்சேரும். இவைகளை ஆதாரமாகக்கொண்டு கிறீஸ்துநாதர் ஓர் சபையை ஏற்படுத்தினாரெனவும், அதற்குத் தலைவராய் இராயப்பரை வைத்தாரெனவும், அவரிடமாய் வருபவரும் அத்தலைமைப்பதவி பெறுகிறாரெனவும், அதேகிறீஸ்துநாதர் திருச்சபையையும், பாப்பரசரையும் அழிவுறாமற் பாதுகாத்துவருகிறாரெனவும் கிறீஸ்துவர்கள்விசுவசிக்கின்றார்கள்.

ரோமைச் சக்கரவர்த்திகளும், நாசகார நரகுழுவினரும், கொடுங்கோல்மன்னரும், மனச்சாட்சியற்ற சர்வாதிகாரரும் திருச்சபையை வீழ்த்தியழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆயின், பாப்பரசரின் ஸ்தானம் அழிவின்றி இருந்துவருகிறது. அது மாத்திரமல்ல; என்றுமில்லாச் செல்வாக்குடனும் விளங்குகி அண்மையில் வத்திக்கானுக்குச் றது. சென்ற ஒருவர் பரிசுத்த பாப்பரசரை முதல்முறைகண்டதும் "அவரே இராயப்பர்; அவரே கல்லு; அவரேதிருச்சபை" எனக்கூறினர்.

"எனது குட்டிகளை மேய்ப்பாயாக" "எனது ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார் கிறீஸ்துநாதர் பேதுருவானவருக்கு. அவரின் பதிலாளி அருளப்பர். மேய்க்கும் மந்தை பல்கலைவிற்பன்னர், பண்டிதரையும், பண்பாடற்ற பாமரமக்களையும் கொண்டது. சில தேசங்களில் அவர்கள் சுதந்திரமாய் வழிபடுகின்றனர்; சிலநாடுகளில் சத்துராதிகள் விசுவாசத்தை அழிக்கவோ, விசுவாசிகளை அவரிடமிருந்து பிரிக்கவோ பகீரதபிரயத்தனஞ் செய்கின்றனர். பரந்துபட்ட இம்மந்தையை அவரவர்க்கேற்ற புத்திபோதரவுகூறி வழிநடத்தும் ஆற்றல்நிறைந்தவர் 23-ம் அருளப்ப பாப்பரசருமன்றே.

# புதிய பாப்பரசரின் சீரிய வாழ்க்கை வரலாறு

கருதினல் ஆஞ்ஜெலோ யோசெவ் றொங்கல்லி ஆண்டவர் 12-ம்பத்திநாத பாப்பரசரிடமாகத் தெரியப்பெற்றதானது எவர்க்குமே அதிசயம்தருவதும், எதிர்பாராததுமாகும். ஆனால், ஆராய்ந்துபார்க்குமிடத்து அதிகப்பற்றான பாப்புமார்மட்டிலும் இவ்விதமேநடைபெற்றிருக்கிறது. உதாரணமாக, புதியபாப்பரசர் யோசெவ் றொங்கல்லிஆண்டவர் யோசெவ் சாத்தோவின் நண்பரும், அவரையிட்டுப் பிரமிப்புக்கொள்பவருமாவர். ஆனால், யோசெவ் சாத்தோ 10-ம்பத்திநாத பாப்பானவராகத் தெரியப்பட்டபொழுது இதுவும் ஆச்சரியம் தருவதாயும், எதிர்பாராததாயும் இருந்திருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை.

### லூர்துபதிப் புதியஆலயம்

இந்தஇருபாப்பரசர்களுக்குமிடையிலுள்ள இசைவானது அம்மட்டுடன்நிற்பதில்லை. 10-ம் பத்திநாதர் பிரசித்தியற்ற ஓர் தபாற்காரரின்புதல்வர். இவர் பாப்பரசராகத் தெரியப்பட்டபோது திருச்சபையின் ஜனநாயகபோக்கினை உலகம் பாராட்டி ஆர்ப்பரித்துக்கூறியது. 23-ம்அருளப்பரும் எளிமையான ஓர்விவசாயியின்புதல்வர். அதனால், இப்பொழுதும் திருச்சபையின் உண்மையான ஜனநாயகபோக்கை இதுவும்தெளிவாக்குகிறது. அம்மட்டா! 10-ம் பத்திநாதர் வெனிஸ்நகரின்பத்திரியாக்குவாய் இருந்தார். அவ்விதமே புதியபாப்பரசரும் இருந்துவந்தார். லூர்துபதியிலே 10-ம்பத்திநாதரின் புதியமகாதேவாலயம் இவ்வருடம்பங்குனி மாதம் சம்பிரமம்மிக்க திருவைபவத்தோடு பிரதிட்டைசெய்யப்பட்டது. இந்தவைபவத்துக்குத் தலைமைதாங்கும்படியாக அனுப்பிவைக்கப்பெற்றவர் கருதினல்றொங்கல்லிஆண்டவரே. இருபாப்புமார்களும் யோசெவ் எனும்நாமத்தையே தங்கள்முதல் நாமங்களாகக் கொண்டுள்ளனர் என்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலதாகும்.

### பிறப்பும் குருப்பட்டமும்

வடஇத்தாலியில் பேர்காமோ நகருக்கு அருகாமையிலே "மலையடிவாரம்" என அர்த்தங்கொண்ட சோத்தோ இல்மோன்தே எனும் கிராமத்தில் 1881-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 25-ந் திகதியன்றுபிறந்த ஆஞ்ஜெலோ யோசெவ் றொங்கல்லி அதிகம் இளமையிலேயே தேவதொண்டுக்குத் தம்மை முற்றாகக் கையளிக்கத் தீர்மானித்தார். ரோமாபுரியிலுள்ள பாப்பரசரின் குருமடத்தில்பயின்று வேதசாஸ்திரத்திலே "டக்றர்" எனப்படும் கலாநிதிப்பட்டம்பெற்று 1904-ம் ஆண்டு ஓர்குருவாக அபிஷேகஞ் செய்யப்பெற்றார். அப்போது அவர் அர்ச். பேதுருவானவரின் 263-வது பதிலாளியாய் இருப்பாரென்று கனவிலேதானும் கருதினவர்அல்ல.

### குருத்துவசேவையும் பட்டாளசேவையும்

குருப்பட்டம்பெற்றபின் வண. றொங்கல்லி சுவாமியார் முதன்முதலாகப் பேர்காமோ நகர் மேற்றிராணியாருக்கு அந்தரங்க காரியதரிசியாக நியமனஞ் செய்யப்பெற்றார். இப்பதவியை அவர் 1905-ம் ஆண்டுமுதல் 1914-ம் ஆண்டுமட்டும் வகித்திருந்தார். அக்காலத்திலே அவர் குருமடத்திலும் படிப்பித்துவந்தார். அவ்வாறாக, முதலாவது உலகயுத்தம் மூண்டுகொள்ளவே, அவர் பட்டாளசேவைக்கு அழைக்கப்பெற்று, 1918-ம் ஆண்டுவரை செஞ்சிலுவைச்சங்கத்தில் ஓர் அதிகாரியாகவும், இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றின் விசாரணைக்குரவராகவும் கடமை பார்த்துவந்தார். அதன்மேல் அடுத்த மூன்றுவருடங்களாகச் சமூக, ஆத்மீகசம்பந்தமான அப்போஸ்தலிக்கதொண்டில் ஈடுபட்டிருந்தபோது, 15-ம் ஆசீர்வாதப்ப பாப்பானவராலே 1921-ம் ஆண்டு ரோமாபுரிக்கு வரவழைக்கப்பெற்று, அங்கு விசுவாசப் பரப்புதல் திருச்சங்கத்தில் மிஷன்களுக்கு உதவிசெய்யும் சபைகளைத் திரும்ப ஒழுங்குபடுத்துவதிலே துணைசெய்துவந்தார்.

### இராசிய தூதுச்சேவை

1925-ம் ஆண்டுதான் அவரின் பிரபலிக்கமான இராசிய தூதுச்சேவை ஆரம்பமானதுஎனலாம். ஏனெனில், அவ்வருடத்தில்தான் அவர் மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்பெற்றுப் பல்கேரியநாட்டுக்கு அப்போஸ்தலிக்க தரிசகராக அனுப்பிவைக்கப்பெற்றார். அவர் பிந்த அந்நாட்டின் அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியாயினர். பின்னர் 1935-ம் ஆண்டு கிறீஸ் நாட்டுக்கும், அடுத்தபடியாகத் துருக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் அப்போஸ்தலிக்க ஸ்தானு பதியாக நியமனஞ் செய்யப்பெற்ருர். இந்த நாடுகளிலெல்லாம் அவர்மக்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொண்டார். அப்போது அவரைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்ட அன்பும், அருளும் பொருந்திய முறைகளை இன்றுமே அவர்கள் ஞாபகத்தில் கொண்டுள்ளார்கள்.

### இராசிய ஸ்தானிகசேவை

1944-ம் ஆண்டு பரீஸ்நகரிலே அப்போஸ்தலிக்க ஸ்தானிகராக நியமனம்வரவே அதனை ஏற்று அங்குசென்று தமது நியமன அதிகாரப்பத்திரங்களை ஜெனறல் தெகோல் அவர்களின் புதியஅரசாங்கத்தினிடம் சமர்ப்பித்தார். பின்னர் தம்முடைய பெரியவீரர் திலகமான 10-ம் பத்திநாத பாப்பானவரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து வெனிஸ்நகரின் பத்திரியாக்குவாகி வெனிஸியர்களின் மிகப்பெரிய நன்மதிப்பையும், வந்தனை வழிபாட்டையும் பெற்றுவிளங்கினர். பொதுவிலே அவர் திருச்சபையின் இராசிய சேவைத்துறையில் ஈடுபட்டிருந்த காலத்திலே தலைசிறந்த இராசதந்திரியான ஓர் குருசிரேஷ்டராகவும், தாம் கையிடுங்கருமம் பெரிதாயிருந்தாலென்ன, சிறிதாயிருந்தாலென்ன பெரிய இருதயமும், பக்திவைராக்கியமும், மனேற்சாகமும், அயராமுயற்சியுமுள்ள ஓர்குருவாகவும் விளங்கிவந்திருக்கிருர்.

---

### அதிகமான சாராயப்பாவனை

இலங்கையிலே சாராயப் பாவனை முன்னெருபோதுமே இல்லாதவிதமாய் அவ்வளவாக அதிகரித்திருக்கின்றது. சென்றவருடம் ஐப்பசிமாதமுதல் இவ்வருடம் புரட்டாசியீருகவுள்ள அரசிறைவருடத்திலே 14லட்சம்கலன் சாராயம் செலவாகியிருக்கிறது. இதற்குக்காரணம் பிறநாட்டுக் குடிவகைகளின்விலைகள் அதிகரித்திருப்பதும், கள்ளவிலே சாராயம்வடிக்கிறவர்களைக் கட்டுப்படுத்துவதிலே மதுபரிபாலனப் பகுதி கண்டிப்பான நடவடிக்கைஎடுத்துவந்திருப்பதுமேயென்று அதன்தலைவர் கூறுகின்ருர். சாராயப்பாவனை அதிகரித்துவருவதாலே அடுத்தவருடமுதல் அரசாங்க சாராயவடிசாலைகளும், தனிப்பட்ட சாராயவடிசாலைகளும் கொடுத்துவரும் சாராயங்களின் தொகை கூட்டப்படவிருக்கிறது.

### விபத்துகளால் ஏற்படும்செலவு

வீதிகளில்ஏற்படும் விபத்துகளாலே தினமும்அரசாங்கத்துக்கு ஏறக்குறைய 15,000ரூபா செலவேற்படுகிறது. இந்தவிபத்துகள் அதிகரித்துக்கொண்டுவரச் செலவும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஒவ்வோர்விபத்தும் அரசாங்கத்துக்குச் சராசரியாக 300ரூபா செலவை உண்டுபண்ணுவதாக உத்தியோகப்பற்றில்லாத புள்ளிவிபரம்தெரிவிக்கிறது. சென்ற 1957-ம்ஆண்டிலே 16,093 விபத்துகள் நிகழ்ந்துள்ளன. அதனுல், அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளசெலவு 48,27,900 ரூபா. நிகழும் 1958-ம்ஆண்டிலே முதல்ஆறுமாதங்களிலும்மாத்திரம் 8,422 விபத்துகள் நிகழ்ந்திருக்கின்றன. அதனுல், இவ்வருடத்தில் அதிகமானசெலவு ஏற்படவிருக்கிறது. ஓர்விபத்து நேருமிடத்துப்பொலிசர், நீதிபதி, டக்றர், நேர்ஸ்மார் தேவைப்படுகின்றனர். அத்துடன் மருந்துச்செலவு ஆதியனவும் ஏற்படுகின்றன.

## பாப்பரசரின் முதலாவது ஆசீர்வாதம்



23-ம் அருளப்ப பாப்பரசர் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய முகப்பின் மேல் மாடியில் நின்று "ஊர்பி எற் ஓர்பி" (நகருக்கும், உலகத்துக்கும்) எனப்படும் தமது முதல் ஆசீர்வாதத்தைத் தாம்தெரியப்பெற்ற அன்றிரவு அருளுகிருர். இஃது ஓர் றேடியோப் படம். மறுநாள் சாயந்தரம் "ரைம்ஸ்" பத்திரிகைக்குக் கிடைத்தது.

# மன்னர் பாப்புவின் மகுடதாரண வைபவம்

"மும்முடிகள் புனையப்பெற்ற இந்த மும்மடிக் கிரீடத்தை ஏற்றுக்கொள்வீராக! தாம் இளவரசர்களுக்கும், அரசர்களுக்கும் பிதாவும், உலகில் மனுக்குலத்தை ஆண்டுநடத்தும் மேய்ப்பரும், பூமியிலே நம் திரு மீட்பராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் பதிலாளியுமாய் இருக்கிறீரென்பதை அறிந்துகொள்ளுவீராக! அத் திரு மீட்பருக்கு அனுதினசதாகாலமும் மகிமையும், தோத்திரமும் உண்டாகக்கடவது" என்று பிரதம கருதினுல், தியாக்கோன் ஆண்டவர் வசனித்து இருபத்துமூன்றும் அருளப்ப பாப்பரசரது திருச்சிரசிலே மணிமுடியைச் சூட்டலாயினர். உயர்ந்த பலிபீடத்தில் நிறைவேறிய பெரிய பாடற்பூசை உட்படச் சரித்திரப்பெருமைவாய்ந்த பாரம்பரியமான ஆடம்பர திருவைபவங்களின் பின்னரே அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய மேன்மாடியின் மேல் பாப்பரசர் திருமுடி சூடலாயினர்.

மாபெரும் மங்கலகரமாய், கண்கொள்ளா மனேகரகாட்சியாய் நான்கு மணிநேரமாக நடந்தேறிய திருமுடி சூட்டுவிழா வைபவத்தைக் கண்டுகொள்ளுமாறு அஃது ஆரம்பமாவதற்கு ஏறக்குறைய ஒருமணி நேரத்தின்முன்னரே அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திற்குமுன்பாக இரண்டரைலட்சம்மக்கள் குழுமியிருந்தார்கள். திருவைபவத்தின்போது, பாப்பரசரது சிம்மாசனத்தின் முன்பாகச் சிவப்பு வஸ்திரங்களால் அலங்கரித்திருந்த ஓர்மேடையிலே அவர்பிறந்து வளர்ந்த சோத்தோ இல் மொன்தே என்ற வட இத்தாலிய கிராமத்திலிருந்து வந்திருந்த அவருடை மூன்று சகோதரர்களும், சகோதரியும், மருமக்களும், பெருமக்களுமாக இருபத்திரண்டுபேரும், அவருடைய தாய் தந்தையரது சகோதரங்களின் புத்திரர், புத்திரிகளாய் மூவரும் அமர்ந்திருந்தார்கள். தனது மத்தியபாகமும், அரைவட்டாகரமான விசிராமமும் சிவப்பு—தங்கவர்ணச் சித்திரப் பட்டாடைகள் தொங்கவிடப்பட்டுச் சிங்காரமுற்று விளங்கிய மகா ஆலயமானது, அனுமதிச்சீட்டுகள் பெற்றிருந்த முப்பதினுயிரவருஞ் சென்று தங்கள் ஆசனங்களை வகிக்குமாறு பொழுது உதயமாகிச் சிறிதுவேளையின்பின் திறந்துவிடப்படலாயிற்று.

அத்தருணம் பாப்பரசர் மாளிகையிலே அவரைப் புடைசூழ்ந்து பரிவாரமாக அழைத்துவருமாறு கருதினுல்மார் 50 பேரும், உயர்ந்தகுருசிரேஷ்டர்கள், அரசதோழர்கள், மெய்காப்பாளர்களாய் 2,500பேரும் ஒன்றுகூடினுர்கள். நிகழும் கார்த்திகைமாதம் 25-ந் திகதியன்று தமது 77-வது வயதை அடையவிருக்கும் பாப்பரசர் வத்திக்கான்மாளிகையின் மேன்மாடத்தளத்திலுள்ள தமது பிரத்தியேக உள்ளறையிலிருந்து இரு நோபிள்காவலர், இருசுவிஸ்காவலர்சமேதராய்வெளியே நடந்துவந்தார். திருவஸ்திர மண்டபத்திலே இருகருதினுல்மாரின் துணையோடு திருவஸ்திரங்கள் அணிந்து ஆயத்தமானதும் மகா ஆலயத்தை நோக்கி நீடிய சலவைக்கல் படிகள்வழியாகநடந்து கீழ்ப்படியை அடைந்து "ஜெஸ்தாத்தோறியா" என்ற பல்லக்குப்போன்ற தமதுஆசனத்தில் அமர்ந்ததும், அந்தச் சிம்மாசனத்தைச் சுமந்துசெல்லப் பரம்பரையாக உரிமைபெற்ற பன்னிருவர் அதனைத் தங்கள் தோள்களில் தூக்கிவைத்துச் சுமந்து ஆலயத்தைநோக்கி வழிகொண்டார்கள். அப்போது பொற்சித்திரத்தையல்வேலைப்பாடுடையதாய் ஆனைத்தந்தவர்ணப் பட்டினுற்செய்த மேல்விதானம்ஒன்றைக் குருசிரேஷ்டர்கள் எண்மர் தாங்கிச்சென்றனர்.

இத்தகைய ஆடம்பரபவனியாகப் புதியபாப்பரசரின் வெண்மையான திருஉருவம் எல்லோரதுசிரங்களுக்கும் மேலாகக் காட்சியளித்துக்கொண்டு அவர்களது ஆனந்தக்கூச்சல்களின் மத்தியிலே மகாதேவாலயத்தை நோக்கிப் பதமையாகச்சென்றது. இந்தப் பரமானந்தக்காட்சியைக் கிறீஸ்துவ நாடுகளின் அதிகமான தலைவர்களும், கிறீஸ்துவ நாடுகள் அல்லாதனவற்றின் அநேகதலைவர்களும் பிரதிநிதிகளாகச் சென்று ஓர்விசேஷமேடையிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தார்கள். ஈற்றில், பாப்பரசர் உலகின்மகாப் பெரியஆலயத்தில் பிரவேசித்தபோது, அதன் பொன்மயமான மேற்கூரையிலிருந்து வெள்ளிஎக்காளங்கள் இசைத்தன. பதினுயிரம் மின்சார தீபங்கள் ஒரேசோதியாய்ச் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

ஆலயத்தின் மத்தியபாகத்தில் பிர[illegible] 30,000 மக்களினூடாக இந்த மாபெரும்பவனி சென்ற காட்சி பெரும்மாட்சியுடையதாயிற்று. பின்னர் ஆங்குநிகழ்ந்த சம்பிரதாயப்படியான பல்வேறுவைபவங்களின்முடிவில் திவ்வியபூசை நிறைவேறியது. அதன்மேல் பாப்பரசர் முன்போலப் பக்திப்பரவசம் உண்டுபண்ணும் பெரும் பவனியாக ஆலயமுன்வாயிலை அடைந்தார். பல்லக்குப்போன்ற தமது சிம்மாசனத்தினின்றும் இறங்கினர். மகாஆலய தலைவாயிலின்மேலாகவுள்ள உயரமான மேல்மாடிக்கு இவர்ந்து சென்ருர்.

அங்கே கருதினுல்ஒருவர் அவர்சிரசில் இருந்த அதிமேற்றிராணியாருக்குரிய திருமுடியை அவர்சிரசிலிருந்து எடுத்தார். பிரதம கருதினுல் தியாக்கோன்அவர்கள் மும்முடிக் கிரீடத்தை எடுத்து அவர்சிரசிற்குமேலாக உயர்த்திக் கீழேஇறக்கி, "மும்முடிகள் புனையப்பெற்ற இந்தமும்மடிக் கிரீடத்தை ஏற்றுக்கொள்வீராக! தாம் இளவரசர்களுக்கும், அரசர்களுக்கும் பிதாவும், உலகமுழுவதையும் ஆளுகிறவரும், நம்திருமீட்பராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் பதிலாளியும்என்பதை அறிந்துகொள்வீராக! அத்திருமீட்பருக்கு அனுதினசதாகாலமும், மகிமையும், ஸ்தோத்திரமும் உண்டாகக்கடவது" என்று வசனிக்க, அங்கு சமுத்திரம்போலக் குழுமியிருந்த மக்கள் குழாம் "ஆமென்" என்று பதிலளிக்க, அவரதுதிருச்சிரசிலே அந்தமணிமுடியைச் சூட்டலாயினர். அதன்மேல் பாப்பரசர் (நகருக்கும், உலகத்திற்குமாக) தமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் வழங்கினர். அப்போது அந்த மக்கள்சமுத்திரத்திலிருந்து எழுந்த ஆனந்தக்கூச்சல் வானைப்பிளந்தது. றோமாபுரியிலுள்ள ஆலயங்களின் மணிகளெல்லாம் நாதகீதஞ்செய்து ஆர்ப்பரித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண. ஹென்றி ஜெலான்ட்சுவாமிகளின் குருத்துவ வெண் பொன் யூபிலி

கடந்த 1-11-58 சனிவாரம் பிற்பகலின்போது, நல்லூர் ஆதீனத்து ஆசிரியர்களின் ஆதரவில் திண்ணைவேலிக் கத்தோலிக்க பாடசாலைமண்டபத்தில் அப்பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. த. க. அமிர்தநாதர் அவர்கள் தலைமையில் யூபிலி நாயகருக்கு ஓர் உபசாரணைவிழா பரிமளிப்பாக நடைபெறலாயிற்று. அவ்வேளை அப்பங்கின் உதவிக்குரவர் வண. எவ். குலாஸ் சுவாமியவர்களையுங் கொண்ட ஞாபகார்த்த பிதிரமைப்படம் பிடிக்கப்பட்டது.

நல்லூர் அர்ச். ஆசீர்வாதப்பர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. சந்தியாப்பிள்ளை அவர்கள் யூபிலிநாயகரை வரவேற்று மலர்மாலை சூட்டிநிற்க, வரவேற்புஸ்தான மாணவிகள் குயிலினுமினிய குரலோடு யூபிலிச்சோபனகீதம் பாடினார்கள். பாலகிஜெயாவின் மதலை நடனம் பார்த்தோரனைவரையும் பரவசப்படுத்தியது.

யூபிலிநாயகரின் சேவைநலன்களைப் பாராட்டிச் சித்திரிக்கப்பட்ட உபசாரப் பத்திரம் ஆங்கில ஆசிரியர் திரு. எம். அந்தோனிப்பிள்ளை அவர்களால் அருட்சிக்குரியவிதமாகப் படித்துக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து பண்டிதர் சிவசம்புநாதர், திரு. சின்னப்பு நாயகம், திரு. அ. மரியாம்பிள்ளை ஆசிரியர்கள் யூபிலிநாயகரின் இருபத்தைந்து வருடகாலத் திருஊழியத்தின் அருமை பெருமைகளைப் பாராட்டியதோடு, கூழிப்பேய்க்கும், கொள்ளைக் கூட்டத்திற்கும் தாயகமாயிருந்த பண்டத்தெருப்பு, இராசமுருக்கடியைப் பாத்திமா மாதாவின் அருள் நிலவும் ஆலயமாக— பக்தகோடிகளின் திருக்ஷேத்திரமாக விளங்கவைப்பதில் யூபிலிநாயகர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியையும், மற்றும் அவரிடம் விளங்கும் தேவதாயாரின் அபாரபக்தியையும் எடுத்துக்காட்டினர்.

கோண்டாவில் கத்தோலிக்கபாடசாலைத் தலைமையாசிரியர் திரு. சந்தியாப்பிள்ளையவர்களால் ஆசிரியர்சார்பில் ஒரு அன்பளிப்பு உபகரிக்கப்பட்டதும், சிற்றுண்டி உபசாரணை சிறந்த முறையில் நடைபெறலாயிற்று.

ஈற்றில், யூபிலி நாயகர் எழுந்து, தமக்குச் செய்யப்பட்ட உபசாரங்களுக் கெல்லாம் தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கையில், தமதுபெற்றோர் தம்மைப் பள்ளிப் பருவத்தில் நடாத்தி வந்த வரலாறுகளை இனிமைசொட்டப்பேசினார். ஆரம்ப பாடசாலைப் பயிற்சிப்பருவம் தமது சீவியத்தில் முக்கியமான கட்டமென்றும், அதனால் ஆரம்ப படசாலைகளில் கல்வியூட்டும் ஆசிரியர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளைக் கடவுளுக்கும், சமூகத்துக்கும் உகந்தவர்களாக ஆக்குவதில் அதிககவனம் செலுத்த வேண்டுமென்றும் புத்தி புகட்டினார். தேவதாயாரில் ஆசிரியரும், பிள்ளைகளும் வைக்கவேண்டிய பக்தியைக் குறித்துப் பேசுகையில் "தமக்குச் செவிகொடுப்பவர்கள் தேவமாதாவின் பக்தர்களாக விளங்குவார்களேயாகில், அதுவே தமக்குப் பரமசந்தோஷமாயும், நன்றியாயும் இருக்கும்" என்பதை விசேஷமாய்க் குறிப்பிட்டார். முடிவில் தமக்குதவிய அன்பளிப்பை அர்ச். தெரேசம்மாள் கோயிலுக்கென உதவித் தமது திருக்கர ஆசீர்வாதமருளினார். யூபிலிவாழ்த்து முழங்கியது.

---

● ஆபிரிக்காவின்நாகபாம்பு தான் பட்சிக்கும் பிராணியைத்தொடாமலே அதைக்கொன்று பட்சித்துவிடுகின்றது. இது அநேகஅடிதூரத்துக் கப்பாலிருந்து தான்கண்டுகொண்ட பிராணியின்மீது விஷத்தைச்செலுத்தி அதன் கண்களைக்குருடாக்கித்தவிக்கச்செய்து பின்னர் தின்றுவிடுகின்றது.

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

### மாதாசபையினரின் பொதுக்கூட்டம்

அண்மையில் நமதுபங்கிலுள்ள கிளென்னி ஆண்கள்பாடசாலையில் மட்டக்களப்புப் பகுதிகளிலுள்ள மாதாசபையினரின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பங்கிலுள்ள மாசில்லா மாதாசபையின்தலைவி செல்வி மேரி ஆஞ்செலா ஆரோக்கியநாதன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார். கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகளும், வண. தோமஸ்சுவாமிகளும், மாதாசபையினரும் சமுகமாயிருந்தனர். தூயஆவியானவர் உதவியைப் பாடல்மூலம் இரந்தபின்னர் ஒவ்வொருசபையினரும் தத்தம்சபைகளின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். அதன் மேல் "மரியாயின் அமலஉற்பவம்" பற்றியும் "சிந்தித்துப்பார்" என்பதுபற்றியும் தாண்டவன்வெளிப்பங்கு மாசில்லா மாதா பத்திச்சபையின் அங்கத்தவர் இருவரால் இருசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு, அதன்மேல் விவாதங்கள் நடைபெற்றன. பின்னர் "மாதாவேசரணம்" என்னும்கீதம் பாடப்பெற்றது. தலைவி அவர்கள் நன்றியுரை கூறியபின் சமுகமளித்திருந்த அனைவர்க்கும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. ஈற்றில் செபவேண்டுதல்களோடு கூட்டம் இனிதே கலைந்தது.

### பரிசுத்த பாப்பரசரின் தேகவியோகம்

பத்தொன்பதாண்டுகளாகச் சத்திய திருச்சபையை மாட்சிமைபெற ஆட்சிபுரிந்தவரான 12-ம் பத்திநாத பாப்பரசர் பரமபதம்அடைந்தார் என்ற துயரசெய்தியைத் தொலைபேசிமூலம் நமதுகட்டளைக்குரவர் அறியவந்ததும் தமதுபங்கிலுள்ள கிளென்னி ஆண், பெண் பாடசாலைகளுக்குச் சென்று இச்செய்தியை அறிவித்து, எல்லோரையும் பங்குத்தேவாலயத்திற்கு அழைத்துச்சென்று, செபமாலைஓதுவித்து, விசேஷசெபவேண்டுதல்கள் செய்வித்தார். அதன்மேல்யாவரும் கிளென்னி ஆண்கள்கழக மண்டபத்திற் கூடினர். அங்கு அகில-இலங்கைத் தமிழாசிரியர் சங்கதலைவரும், ஆண்கள்கழகத் தலைமைஆசிரியருமான ஆசிரியமணி கே. எல். இராசேந்திரம்அவர்களால் பாப்பரசரைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அதன்மேல் கட்டளைக்குரவர் பாப்பரசருக்காக மன்றுடும்படியும், அவருக்காக ஒப்புக்கொடுக்கப்படும் பூசையில் பங்குபெறும்படியும் கேட்டுப் பாடசாலைகளுக்குத் துக்கத்தின் அறிகுறியாக விடுமுறைஅளித்தார். பின்னர் எல்லோரும் கூடியசமுகத்தில் ஆண்கள்கழக முன்றிலிலுள்ள கொடிக்கம்பத்தில் பாப்பரசரின்கொடி துக்கத்தினடையாளமாகக் கட்டளைக்குரவரால் ஏற்றிவைக்கப்பட்டது. பகல்முழுவதும் ஆலயமணிகள் துக்கநாதமிசைத்துக்கொண்டிருந்தன. தேவாலயத்திலும், குருமனையிலும், பங்குக்கிறீஸ்துவர்களின் இல்லங்களிலும் பாப்பரசர்கொடி துக்கத்தினறிகுறியோடு ஏற்றிவைக்கப்பட்டிருந்தது. 13-10-58 திங்கள்வாரம் பிற்பகல் 6-30 மணியளவில் ஆலயமணிகள் துக்கநாதமிசைக்கக் கட்டளைக்குரவர் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றிப் பாப்பரசருக்காக விசேஷ செபவேண்டுதல்கள்செய்து ஞாபகார்த்த மேடையை ஆசீர்வதித்துவைத்தார். பங்குக் கிறீஸ்துவர்கள், பாடசாலைப் பிள்ளைகள், பத்திச்சபையினர் யாவரும் பங்குபற்றிப் பாப்பரசருக்காக வேண்டிக்கொண்டார்கள்.

### விசுவாசப்பரப்புதல் சேவை

சென்ற 19-10-58 ஞாயிறுவாரம் இப்பங்கில் விசுவாசப்பரப்புதல் ஞாயிறு அனுட்டிக்கப்பட்டது. மு-தியமுத்தினங்களிலும் திவ்வியபூசை நிறைவேறியது பிற்பகல் செபமாலை, பிரார்த்தனையின்பின் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட மிஷன்நாடுகளுக்காகப் 11-ம்பத்திநாத பாப்பானவர் இயற்றிய செபமும் சொல்லப்பட்டது. 2-ம் பூசை வண. எல். ஆர். அன்ரனிசுவாமி அவர்களால் பாடற்பூசையாகவிசுவாசப்பரப்புதல்சபைக்கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. பூசையின்பின் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்யப்பெற்று நாள்முழுவதும் முறைமுறையாகப் பத்திச்சபையினர், பாடசாலையினர், கிறீஸ்துவர்களும் சந்தித்து விசுவாசப்பரப்புதலுக்காக வேண்டிக்கொண்டனர். கட்டளைக்குரவர் தம்முடைய 2-ம் பூசையை ஆயித்தியமலை, சதாசகாயமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். விசுவாசப்பரப்புதற் சின்னம் பங்குக்கிறீஸ்தவர்கட்கு விற்பனைசெய்யப்பெற்றது. விசுவாசப்பரப்புதல் உண்டியலிலும் பணம் சேர்க்கப்பட்டது. விளம்பரங்களும் விநியோகிக்கப்பட்டன. விசுவாசப்பரப்புதலுக்கென ஓர்விசேஷ விற்பனை கார்த்திகை மாதம் 30-ந் திகதி ஞாயிறுவாரம் நடைபெறுதற்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

— நிருபர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 759

அச்சுவேலி, தெற்குக்குடி
தாமர் கந்தையா — வழக்காளி.

அல்வாய், தெற்குக்குடி
1. சபாபதி முத்துலிங்கம்
2. பெண் அன்னம்

அச்சுவேலி, வடக்குக்குடி
3. கதிரேசு சின்னையா
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 759-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகளை 1958-ம்ஆண்டு மார்கழிமாதம் 23-ந்திகதி (23-12-58) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும். முதலும், வட்டியும் ரூபா 1,816/50சதம். முதல் ரூபா 1,500-உம், தீர்வைத்திகதி 27-1-56 தொடக்கம், 30-10-56 மட்டும் 10%வட்டியும், கோட்டுச்செலவு 220ரூபா 77சதமும் இறுக்க வேண்டும். இதில் 750ரூபா கொடுபட்டிருக்கிறது.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,816/50சதத்திற்கும்30-10-56தொடக்கம், இறுக்குமட்டும் 5%வட்டியும் இறுக்க வேண்டும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாகம் கிழக்குடிவிசன், அச்சுவேலி கோயிற்பற்று, அச்சுவேலி தெற்கு "குரங்கியடி & சாதாரியடி" என்னும் காணி நிலப்பரப்பு 6. இதில் மேற்குப் பக்கத்தால் நிலப்பரப்பு 2-உம், செய்பயிர் வகைகளும் உண்டு. எல்லை: கிழக்கு — தம்பு இராசதுரையும், பங்காளரும். வடக்கு — கைஒழுங்கை. மேற்கு — சின்னப்பொடியன் முத்துசாமியும், பங்காளரும். தெற்கு — பொன்னையாவின் மனைவி முத்துவும், மற்றவர்களும். பதிவுஇலக்கம் K134|152

2. அச்சுவேலிவடக்கில் "செட்டிசீமா" என்னும்காணி நில. பர. 4-உம், $9\frac{4}{16}$ குளியும். இதில் கிழக்குப்பக்கத்தால் நில. பர. 2-உம், வீடும், கிணறும், மற்றும் செய்பயிர்வகைகளும் உண்டு. எல்லை: கிழக்கு — கைஒழுங்கை. வடக்கு — வேலன் பெண் பரணியும், பங்காளரும். மேற்கு — செல்லையா வைத்திலிங்கம். தெற்கு — கைஒழுங்கை. பதிவுஇலக்கம் K 117|33.

இ. கனகரெட்ணம்,
கொம்மிஷனரும், விலமதிப்பாளரும்,
35- கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, 30-10-58.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 1685

உரும்பிராய், வடக்குக்குடி
நாகலிங்கத்தின் கைம்பெண் தங்கமுத்து
— வழக்காளி.

வல்லாலை, அச்சுவேலிக்குடி
சின்னையா தாமோதரம்பிள்ளை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1685-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக் காணிகளை 1958-ம்ஆண்டு மார்கழிமாதம் 22-ந்திகதி திங்கட்கிழமை (22-12-58) பிற்பகல் 3மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும். முதலும், வட்டியும் ரூபா 2,320. முதல் ரூபா 1,775-க்கும் தீர்வைத்திகதி14-6-57தொடக்கம், 22-8-57 மட்டும் 10%வட்டியும், கோட்டுச்செலவு 184ரூபா 91சதமும் இறுக்கவேண்டும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,320-உம், தீர்வைத்திகதிதொடக்கம் அதற்குக்கூடிய முழுத்தொகைக்கும் இறுக்குமட்டும் 5%வட்டியும் இறுக்க வேண்டும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குடிவிசன், வல்லாலை அச்சுவேலி கோயிற்பற்று "சந்தை"என்னும்காணி நில. பர. 50-உம். இதில் பிரிக்கப்படாத $\frac{4}{50}$பங்கும், கிணறும். எல்லை: கிழக்கு — நடராசா பெண் பொன்னம்மாவின் உரித்தாளரும், வடக்கு — P. S. அய்யாத்துரையும், வயித்திலிங்கம் பெண் சின்னத்தங்கமும் பங்காளரின் உரிமைக்காரரும். மேற்கு — கந்தையா பெண் பொன்னம்மாவும், மற்றவர்களின் ஆதனமும். தெற்கு — முத்துப்பிள்ளை வேதநாயகமும், மற்றவர்களின் ஆதனமும். பதிவு இலக்கம் K 182|43.

2. முன்கூறியதுபோல் அதேஇடத்தில் "ஊத்துவத்தை" என்னும்காணி நில. பர. 3-உம், இதில் பிரிக்கப்படாத அரைவாசி. மேற்குப்பக்கத்தில் இருக்கும் கிணற்றில் கிணற்றுப்பங்கும், வழிவாய்க்காலுக்கு உரித்தும்உண்டு. எல்லை: கிழக்கு — சிவசம்புவின் கைம்பெண் சின்னப்பிள்ளையும், மற்றவர்களின்ஆதனமும். வடக்கு — சின்னப்பிள்ளை செல்லத்துரையும், பங்காளரும். மேற்கு — ராசையா பெண் ராசுவின் ஆதனம். தெற்கு — கணபதி ஆசையனின் ஆதனம். பதிவு இலக்கம் K 140|61.

3. அதேஇடத்தில் "ஆலன்கந்து கூச்சங்காடு" என்னும்காணி நில. பர. 4-உம், பனைமரங்களும். இதில் பிரிக்கப்படாத அரைவாசி. எல்லை: கிழக்கு — மாணிக்கர் கணபதிப்பிள்ளையும், பங்காளரும். வடக்கு — கடல். மேற்கு — பொன்னர் இராசையா. தெற்கு ரோட்டு. பதிவு இலக்கம் K 143|5.

இ. கனகரெட்ணம்,
கொம்மிஷனரும், விலமதிப்பாளரும்.
35- கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குழி, 1-11 58.

## முடிசூட்டுவிழாத் தினம்

23-ம்அருளப்பபாப்பரசர் தமதுமுடிசூட்டுவைபவதினமாகக் கார்த்திகை 4-ம் திகதி செவ்வாய்க்கிழமையைச் சென்ற 29-ந்திகதிபுதன்கிழமை தெரியலானுரென வத்திக்கானிலிருந்து சமாச்சாரம் கிடைக்கலாயிற்று. இந்தத்திகதியானது எதிர்பார்த்ததிலும் அதிகம்முந்தியதாய் இருப்பதையிட்டும், அஃது ஓர்ஞாயிற்றுக்கிழமையாய் இராததையிட்டும் பலருக்குமே ஆச்சரியம் விளைப்பதாயிற்று. ஏனெனில், முடிசூட்டுவைபவம் கார்த்திகை 9-ம்திகதிக்கே குறிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. தெரியப்பட்டுள்ள 4-ம் திகதி இத்தாலியில் விசேஷப்பட்ட அர்த்தபுஷ்டியானது. முதலாவது உலகயுத்தநிறுத்த வெற்றிவிழாவை இத்தாலிகொண்டாடும் மாபெரும் லௌகிக விடுமுறைநாள் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

எமது ஞானத் தளபதி 12–ம் பத்திநாதரை இழந்து பரிதவித்திருந்த நாம் சென்றமாதம் 28–ந் திகதி புதிய பாப்பரசர் தெரியப்பெற்ருர் என அறிந்து ஆனந்த பரவசம் அடைந்தோம். 23-ம் அருளப்பர் எனப் புதுநாமம் பூண்ட புதிய பாப்பரசர் பல்லாண்டு வாழ்க! இறைவனுக்குத் தோத்திரம்!

புதிய பாப்பரசரின் உரிய பெயர் யுசெப்பெ ஆஞ்ஜெலோ ரொங்கல்லி. வட இத்தாலியிலுள்ள பேர்காமோ பகுதியைச் சேர்ந்தவர். அவருடைய பிறந்தகம் சொட்டோ இல் மொந்தே (மலையடிவாரம்). கமத்தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

ரோமையில் குருத்துவகல்வி பயின்று பட்டம் பெற்ருர். குருப்பட்டத்தின் பின் பேர்காமோ மேற்றிராணியாரின் காரியதரிசியாகவும், குருமடத்தின் ஆசிரியராகவும் கடமையாற்றினுர். பின் விசுவாசப் பரப்புதற் சபையின் ரோமைக் காரியாலயத்தில் பணியாற்றினுர்.

சிலகாலத்தின் பின் மேற்றிராணித்துவ அபிஷேகம் பெற்று, பாப்புவின் ஸ்தானுபதியாகப் பல்கேரியா, துருக்கி, கிறீஸ் ஆகியாம் நாடுகளில் கடமை புரிந்துவந்தார். கொன்ஸ்தாந்தி நோப்பிளிலும் லத்தீன் ரீதிக் கத்தோலிக்கரின் தலைமைக் குருசிரேஷ்டராகக் கடமையாற்றினுர். 1944-ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்திற்குப் பாப்புவின் ஸ்தானிகராக அனுப்பப்பெற்று ஒன்பதுஆண்டுகளாக எல்லாரும் வரவேற்கத்தக்க முறையிலும், எவர் மனதையும் கவரத்தக்க முறையிலும் கடமைபுரிந்தார். 1953-ம் ஆண்டு தைமாதம் கருதினுல்பதவிக்கு உயர்த்தப்பெற்று வெனிஸ்மாநகர பத்திறியாக்குவாகவும் நியமனம்பெற்ருர்.

லூர்துபதியில் கட்டப்பெற்ற அர்ச். பத்திநாதர் (பத்தாவது) பேராலயத்தை அபிஷேகஞ்செய்வதற்குப் பங்குனி 25 இல் பரிசுத்தபிதாவின் பிரதிநிதியாகச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நகைச்சுவைமிக்க ரொங்கல்லி பட்டவர்த்தனருடனும், பாமர மக்களுடனும் பாகுபாடின்றிப் பழகுபவர். சமரச மனப்போக்குடையவர். ரோமாபுரிக்கும், புவிக்கும் விடுத்த ஆசிச்செய்தியில் சகலருடையவும் உரிமைகளை வழங்குவதினுல் சமாதானம் ஏற்பட வேண்டுமெனக் கூறினர். அச்சமாதானம் முதலில் ஒவ்வொருவருடையவும் மனதில் ஏற்படும் அகச்சமாதானத்திலேயே ஆரம்பிக்க வேண்டுமென அழுத்திக்கூறினுர். "அமைவும், அமைதியும்" அவரது விருதுமொழி.

23-ம் அருள்நாத பாப்புவின் ஆட்சி செழித்தோங்குக.

அண்ணு.

—※—

## தந்தையைச்சிறைமீட்ட தனயர்கள்

ஸ்பானியதேசத்திலே குரேசிமர் என்ற ஒருகுடும்பம் இருந்தது. தந்தையின் நாளாந்த சொற்பஉழைப்பிலே மூன்றுபிள்ளைகளும், தாயும் வெகுசிக்கனமாகக் குடித்தனம்நடத்திவந்தனர். குரேசிமர்என்றகுடும்பதலைவன் ஓர்முறை தண்டனைக்குரிய குற்றமொன்று செய்ததாக நீதிஸ்தலத்தில் ஆறுவருடக் கடுங்காவல் தண்டனை அல்லது ஆயிரம்ரூபாதண்டம் விதிக்கப்பட்டான். பாவம், அந்த வறியகுடும்பத்தினர் ரூபாக்களுக்கு எங்கேபோவார்கள்? தங்களால் பணங்கட்ட முடியாதென்றும், ஆனுல், தங்களுடைய எதிர்காலநிலைபரம் வெகுகஷ்டமுடையதாகாமல் தங்களில் சற்றுஇரக்கம் காண்பித்துத் தந்தையின் தண்டனையைக் குறைக்க வேண்டுமென்றும் பிள்ளைகள் மன்ருட்டமாகக் கேட்டார்கள். நீதிபதி பிள்ளைகளின்மேல் இரக்கங்கொண்டு, தண்டனையைப் பின்வருகிறபடி மாற்றினுர். அதாவது, ஆறுவருடம் கடுங்காவற்தண்டனை. தண்டனைநாட்களைக் குறைக்க வேண்டுமாயின் ஒருநாள்குறைக்கிறதற்கு அரைரூபா கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுத்துத் தண்டனைநாட்களைக் குறைக்கலாம் பிள்ளைகள் இத்தீர்ப்பைக்கேட்டு, ஆரம்பத்தில் துக்கம் அடைந்தாலும், பின்னர்சிறுதுமனந்தேறி, உடனே தங்களிடமுள்ள பொருள்பண்டங்களிற் சிலவற்றை விற்று நூறுரூபாய்கட்டித் தந்தையின் தண்டனைநாட்களில் இருநூறைக்குறைத்தனர். பின்பு, எப்படியும் கஷ்டப்பட்டு உழைத்துத் தங்கள்தந்தையின் உத்தரிப்பு நாட்களைக்குறைத்து அவரைக்கெதியிலே விடுதலைசெய்வித்து விடவேண்டுமென்பதே தங்கள்முக்கிய அலுவலென்று உணர்ந்து கஷ்டமும், மற்றவர்கள் இழிவானதென்று கருதுவனவுமான பற்பலதொழில்களை வெகுகஷ்டத்தோடு செய்து பணஞ்சம்பாதித்தனர். சாப்பாட்டிலும் ஒறுப்பனவுசெய்தனர். உடுபுடவையையும் அவர்கள் நல்லதாகத்தேடவில்லை. மிகவும் கஷ்டசீவியம் சீவித்துத் தந்தையை விடுதலைசெய்வதற்காகப் பணத்தைச்சேர்த்தனர். இப்படிச்செய்ததில் அவர்கள் கிழமைவீதம் ஐம்பதுரூபாவுக்குமேல் மிச்சம்பிடித்தனர்.

பிள்ளைகள் பிரயாசப்பட்டு உழைத்து ஆறுவருஷம் சிறையில் இருக்கவேண்டிய தந்தையை ஒருவருஷத்தோடு சிறையைவிட்டுவரும்படி செய்தனர். பிள்ளைகளுடைய இச்செயலும் மதித்தற்கரும் ஓர் நற்செயலாகும். தந்தை சிறைமீண்டு வந்ததும் பிள்ளைகளையும், மனைவியையும் கட்டிமுத்தமிட்டு "என் கண்மணிபோன்றவர்களே! என்னை விடுதலைசெய்வதற்காக நீங்கள் சாப்பாட்டை ஒறுத்தீர்கள்; உடுப்பை ஒறுத்தீர்கள்; மற்றவர்கள் இகழும்படியாக இழிவானதொழிலைச் செய்தீர்கள்; இந்தஒருவருஷமும் உங்களை முழுவதும் எனக்காகவே செலவழித்து என்னைமீட்டு விட்டீர்கள்; நீங்கள்இனி ஒருதொழிலுக்கும் போகவேண்டாம்; நானே உங்களுக்கு உழைத்துத்தருவே"னென்று சொல்லிவெகுகஷ்டபிரயாசத்துடன் உழைத்து [illegible]ருய்ச் சாப்படவும், உடுக்கவும், சந்தோஷமாய்ச் சீவிக்கவுஞ்செய்தார்.

சகோதரரே! இந்தக்கதையிலே தந்தை சிறையிற் போடப்பட்டது போல் எங்கள் தந்தை, தாய், சகோதரர், உறவினர், சிநேகிதர் உத்தரிப்புஸ்தலச் சிறையிற் போடப்பட்டிருக்கிருர்கள். உங்கள்ஞானக்காதைத் திறவுங்கள்! "ஐயோ! தாங்க முடியாத கொடிய வேதனைப்படுகிரும்; எங்கள்மேல் இரங்குங்கள்! எக்களுக்கு உதவிசெய்யுங்கள்! எங்கள் வேதனையைக் குறையுங்கள்; எங்களை மறந்துபோனீர்களா? உங்கள் அன்புக்குரியவர்கள் கொடிய வேதனைப்படுகிரும். எங்களைக் கெதியிலே விடுதலைசெய்ய உங்களிடம் வல்லமைகள் இருக்கின்றனவே! எத்தனையோ வழிவகைகள்உண்டே! ஒரு உதவியும்செய்யாமல் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறீர்களே!" என்று அபயமிடும் சப்தம் உங்கள் காதுகளில் விழுவதைக்கேளுங்கள். அவர்களுடைய உத்தரிப்பின் காலத்தைக் குறைக்கமுன்வாருங்கள்!

இப்படி எங்களைப்பார்த்து இரந்து கேட்பவர்கள் தங்கள் உத்தரிப்பைக் குறைக்க ஏதும்செய்ய வகையற்றவர்கள். ஆதலின் அவர்களை வறியோர்என்று சொல்லலாம். வறியவர்கள் தங்கள்வல்லமையால் தங்களைப்போஷிக்கமுடியாமலே மற்றவர்களிடம் இரக்கிருர்கள். நாங்களோ உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்கு உதவிசெய்யக்கூடிய செல்வங்களைச் சம்பாதிக்கவும், கொடுக்கவும் கூடியவர்களாக இருக்கின்ரும். ஆதலின் நாம் தாராளகுணத்தோடு திவ்வியபூசைசெய்வித்துப், திவ்வியபூசையை நாளாந்தம் கண்டும், செபமாலைபிரார்த்தனை முதலியசெபங்களைச்செய்தும், ஒறுத்தல்முயற்சிகளை மேற்கொண்டும், திருச்சபையால்கொடுக்கப்பட்டபலனுள்ள மனவல்லயச்செபங்களை ஓதியும் அவர்களுக்கு இச்செல்வங்களைக் கொடுத்து அவர்கள் உத்தரிப்புக் காலத்தைக் குறைப்போமாக. "இச்சிறியோரில் ஒருவனுக்கு என்நாமத்தின்நிமித்தம் குடிக்கக் கொஞ்சந் தண்ணீர் கொடுத்தாலும் அதற்குப் பரலோகத்திற் சம்பாவனை உண்"டென்றுரைத்த எம்பெருமான் நாங்கள் செய்யும் இப்பெரிய உபகாரங்களுக்கு எவ்வளவோசன்மானம்மறுஉலகிற் தருவார். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், இரக்கமடைவார்கள்" என்று எம்பெருமான் மலைப்பிரசங்க வாக்கியத்தின்படி நாங்கள் உத்தரிக்கிறஆத்துமாக்களில் இரங்கி எவ்வளவு உதவி செய்கிருேமோ அவ்வளவிலும் பன்மடங்கான தேவஇரக்கத்தைப் பெறுவோம்.

சா. அ.

—※—

## புரூே சுவாமியார்

புரூே சுவாமியார் பூசைப்பலி நிறைவேற்றுவதற்காக ஒருகுறித்த அறைக்குச் சென்று கொண்டிருக்கிருர். அவர் வரும்வழியை ஆத்திரத்துடன் நோக்கிக் கொண்டிருக்கிருன் பீட்ரூே என்னும் சிறுவன்.

மெக்சிக்கோ அரசாங்கம் கிறீஸ்தவர்களையும், சந்நியாசிகளையும்மிகவும் துன்புறுத்தி மடங்கள், பாடசாலைகளையெல்லாம் அழித்து நிர்மூலம் பண்ணியகாலம் அது. புரூேசுவாமியாரைப்போன்ற சிலகுருமார் வேதகலாபனைக் காரரிடமிருந்து தப்பித் தங்கள் வேதக்கடமைகளை இரகசியமாக நிறைவேற்றி வந்தனர். இவர்களை வேதவிரோதிகள் இராப்பகலாய்த் தேடிக்கொண்டிருந்தார்கள். அக்கொடியவர்களிடமிருந்து நம் சுவாமியார் பலதடவைகள் காப்பாற்றப்பட்டிருக்கிருர் இச்செய்திகளைப் பீட்ரூே தன் பெற்ருர் மூலம் அறிந்திருந்தான்.

ஒருநாள், புரூே சுவாமியார் சில சிநேகிதர்களுடன் ஒரு வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். இவரைப் பொலிசார் கண்டுவிட்டார்கள். அவர்கள் வேறுவண்டியொன்றில் சுவாமியாரைக் கைதியாக்கும் நோக்கத்துடன் சென்றனர். வண்டி ஒருமூலையாற் திரும்புந்தருணம் சுவாமியார் வண்டியை விட்டுக் கீழே குதித்து ஒருமர மறைவில் ஒழிந்து கொண்டிருந்தார். சுவாமிக்கு ஒரு ஆபத்தும் நேரிடாதென பீட்ரூே எண்ணினுன். அதேசமயம் ஒருவாலிபன் இவனை நோக்கிவந்துகொண்டிருந்தான். அவன் வைக்கோலால் செய்த தொப்பியும், அழகான சட்டையுமணிந்து கையில் ஒரு பொல்லுடன் தோன்றினுன். வந்தவன் நேரே (பூசை சொல்லும்) சுரங்க அறைக்குச் சென்று அதனைப் பார்வையிட்டுக் கொண்டு "இங்கே பொலிஸ்மார் வந்தார்களா?" என்று வினவினுர். அதன்பின் அறைக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனுர். பீட்ரூே கதவைச் சாத்திவிட்டான்.

இப்போ வந்தவர் புரூே சுவாமி என்பதைப் பிறகுதான் பீட்ரூே அறிந்தான். வெளியே பார்த்தான்; எல்லாம் அமைதியாக இருந்தது. சடுதியாக ஒருபொலிஸ் கார் வந்து தரித்தது. பொலிஸ்மார் இந்தக்கட்டடத்தையே சுட்டிக்காட்டினுர்கள். உடனே பீட்ரூே அறைக்குள் ஓடிச் சுவாமியைத் தேடினுன் "பொலிஸ் பொலிஸ்" என்று சப்தமிட்டான். ஒழியும், ஒழியும் என்று குளறினுன். சுவாமி தலையை அசைத்துவிட்டு தன் அலுவலில் கண்ணுயிருந்தார்.

பீட்ரூே:— கட்டாயம் உம்மைக் காணப்போகிருர்கள் சுவாமி.

புரூே:— பீட்ரூே நீர் மௌனமாயிரும். நான் அவர்களுடன் கதைக்கப் போகிறேன்.

கீழே சென்ருர். கதவைத் திறந்து கொண்டு பொலிஸ்மாரைப்பார்த்து, "அமைதி! அமைதி! இங்கிருக்கும் நோயாளிகளுக்கு மரியாதை இல்லையா?" என்ருர்.

பொலிஸ்மார்:— நாங்கள் ஒரு குருவானவரைத் தேடுகிருேம். மிக்சேல் புரூேசுவாமியார் இங்கே இருப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புரூே:— (சிரித்துக் கொண்டு) ஓ! அப்படியானுல் அவரைத் தேடுவதற்கு நான்உங்களுக்கு உதவிசெய்வேன். என்னுடன் வாருங்கள்.

(ஒவ்வொரு கதவிலும் தட்டுகிருர்) "நன்ருகப் பாருங்கள். கட்டிலின் கீழ்ப்பாருங்கள். சுரங்க அறையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கவேண்டாம். இரகசியக் கதவுகளிருக்கும் பாருங்கள். கதவுக்குப் பின்னல் ஒழிந்திருப்பார், நன்ருய்ப் பாருங்கள். மேலும் கிழும் பாருங்கள்."

பொலி:— "நாங்கள் எல்லா இடமும் பார்த்துக் களைத்துப் போனேம். அவர் இங்கே இல்லை. இது நிச்சயம். நாங்கள் போகிறேம்."

சுவாமியும் அவர்கள் தலைவனுக்குக் கைகுலுக்கி அனுப்பிவிட்டார். அவர்கள் போய்மறையும் வரையும் பார்த்துக்கொண்டிருந்தார். அதன் பின் அவர் பீட்ரோவைப் பார்த்து "நீ நல்ல உதவியாள்தான். நல்லாய்ப் பயந்துபோனுயா?" என்ருர்.

பீட்:— "ஆம் சுவாமி, நல்லாய்ப்பயந்துவிட்டேன். கடவுள்தான் எங்களைக் காப்பாற்றினுர்" என்ருன்.

இவ்வாறேபலதடவைகளிலும்தேவனுற் காப்பாற்றப்பட்ட சுவாமியார் கடைசியாய்ப் பிடிபட்டார். வேதவிரோதிகளாற் சிறைவைக்கப்பட்டார். குறித்த தினமும் வந்தது. முற்றவெளிக்குக் கொண்டு வரப்பட்டார். நெருப்புச்சூளை ஆயத்தமாய் இருந்தது கடைசி வசனமாக உரத்த சப்தத்துடன் "கிறீஸ்து இராசா நீடூழி வாழ்க" என்று கூறினுர். கிறீஸ்துவில் நித்திய நித்திரையானுர். மெக்சிக்கோவின் தன் மக்களுக்காகப் பலியானுர். வேதசாட்சியின் இரத்தம் வேதத்தின் வித்து.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1574**

***யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்***

வண்ணர்டண்ணை மேற்கு
முருகேசு பென்னுத்துரை
பெண் சங்கம்மா — வழக்காளி.

எதிராக
வண்ணர்பண்ணை மேற்கு

1. அப்துல்காதர் முகம்மது மீராசகிப்பும்,
2. பெண் சகிருஉம்மாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1574-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஒருதண்டுக்காணியை 1958-ம்ஆண்டு மார்கழிமாதம் 4-ம்திகதி வியாழக்கிழமை முற்பகல்10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,313/50-உம், இன்னும் ரூபா 1,000-த்திற்கு 4-4-57தொடக்கம், 12-12-57 வரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 211ரூபா 22சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணை கோயிற்பற்று, வண்ணர்பண்ணை தென்மேற்குஇறை "தாளம்புலம்" பர. நில. இலா. ஒன்றும், எட்டில்மூன்றும் (ப. நி. இ. $1\frac{3}{8}$), செய்பயிரும், வீடும், கிணறும். எல்லை: கிழக்கு — சேகுமுகம்மது யூசுவுக்கும், பெண் சுலைகாஉம்மாவுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு — செய்யது அலிபீர் அப்துல் அலிம்சகிப் ஆண்டவர் அவர்களுக்குரிய தர்மசாதன ஆதனம். மேற்கு — வாய்க்கால். தெற்கு — ருேட்டு. இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியில், சொரியலாய் பர. நில. இலா. அரையும் ($\frac{1}{2}$), கல்வீடும், அதற்குச் சேர்ந்தவைகளும்.

தி. ந. ஆசீர்வாதம்,
கோம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
21, இரண்டாம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
31-10-58

## புதியகுரவருக்கு வரவேற்புவிழா

யாழ்ப்பாணம்,பரிசுத்தபுதுமைமாதா கோவில்கிறீஸ்துவர்கள் பன்னெடுநாளாய் ஆவலுடன்எதிர்பார்த்திருந்த பொன்னுளாகிய அன்று 3-10-58 வெள்ளிக்கிழமை அவர்களின் புனித கோவில் என்றுமில்லாத அலங்கார கோலம் பூண்டுவிளங்கியது. அன்று சாயந்தரம் கோவிற்கிறீஸ்துவர்களும், மற்றும்அன்பர்களும், நண்பர்களும் புதியகுரவர் வண. கி. லோப்பையா பனிமயம்சுவாமியவர்களை மேற்றிராசனமாளிகையிலிருந்து வாத்தியவரிசைகளுடன் ஊர்வலமாகக் கோவிலுக்கு அழைத்துவந்ததும், ஆலய மணிகள்ஆர்ப்பரிக்கக் கோவில்முன்றிலிலே மக்களின் கரகோஷங்கள் மத்தியிலே மாலைகள்அணிவித்து வரவேற்கப்பெற்ருர்.

அதன்மேல் புதியகுரவர் தமதுபங்குக்கோவிலிலே முதன்முறையாகத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்அருளினுர். பின்னர் ஏனையகுரவர்கள் சமேதராய்ப்புதியகுரவரைக் கோவில்முன்றிலிலே அழகுறஅமைக்கப்பட்டிருந்த மேடைக்கு அழைத்துச்சென்று ஆசனங்களில் அமரச்செய்யவே; சிறுவர்களால் வரவேற்புக்கீதங்கள் படிக்கப்பட்டன. அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அதன்பின் ஆசிரியர் திரு. எம். விக்ரர்அவர்கள் வரவேற்புப்பத்திரம் படித்துக்கொடுத்தார். தொடர்ந்து பரிமேலர்எஸ். அருளானந்தம்அவர்கள் நிகழ்த்தியசொற்பொழிவிலே புதிய குரவரது தாய்தந்தையரின் நற்குணங்களையும், தேவபக்தியையும், புதுமைமாதாகோவிலின் தொன்மையையும் குறிப்பாக எடுத்துக்காட்டினுர். அடுத்தபடியாகத் திரு. பி. எம். ஜோண்அவர்கள் குருமாரின் மகத்தான அந்தஸ்தையும், அவர்களுக்குக் கிறீஸ்துவர்கள் காண்பிக்கவேண்டிய சங்கைமரியாதையையும், இக்கோவிலைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள்தங்களிடையே இரண்டாவது குரவரைக்கண்டுவிட்டனர்; மறுவருடம் மூன்றுவதுகுருவானவரையும் காணும்பாக்கியம் பெற்றிருக்கின்றனரென்பதையும் எடுத்துக் காட்டினுர். செல்வி பிரான்சீஸ்கம்மா ஞானப்பிரகாசம் புதியகுரவரையும், அவரின் தாய்தந்தையரையும் பலவாறு புகழ்ந்து, அவர்வரவால் கோவிற்கிறீஸ்துவர்கள் பெரும்மகிழ்ச்சிகொள்வதாகக் கூறினுர். இறுதிச்சொற்பொழிவாக வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளைசுவாமியவர்கள் புதியகுரவரின் தாய்தந்தையரைப்பாராட்டி, அடுத்தடுத்து இருகுரவர்கள் வண. ஈ. பொமிக்கோசுவாமியவர்கள்காலத்திலே இப்பங்கில் உதயமாகியிருப்பது அவருக்குக்கிடைத்த ஓர்பெரும்அதிர்ஷ்டமென்று சிறப்பாகக் கூறிமுடித்தார் முடிவில் ஆசிரியர் எஸ். சூசையா அவர்கள் கோவிற்கிறீஸ்துவர்கள்சார்பில் சமூகங்கொடுத்த குருப்பிரசாதிகளுக்கும் சொற்பொழிவாற்றிய பெரியோர்களுக்கும், மற்றும் பெருமக்களுக்கும் நன்றிதெரிவித்தார்.

மறுநாள்சனிக்கிழமை காலை புதிய குரவர் தமதுபங்குக்கோவிலிலே பல குரவர்களும், கன்னிபாஸ்திரிமாரும், மற்றுந்திரளானமக்களும் சமூகமாக, அதிவண. ஜே. புருேகான், வண. தேவராஜாகுரவர்கள் துணைபுரியத் தமது முதற்பெரியபாடற்பூசையை நிறைவேற்றினுர். பூசைவேளை வண. எம். ஜே. மரியாம்பிள்ளைசுவாமியவர்கள் குருத்துவத்தின் மகிமைபற்றிய பொருள்படச் சிறந்ததோர் பிரசங்கம் செய்தார். ஈற்றில் புதியகுரவரின் ஆசியோடு விழா இனிதேநிறைவாயிற்று.

—நிருபர்.




### நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்றேறியாவாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினுல் ஏற்படும்ரோகங்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே
எமது சேவையின் இலட்சியம்

## துக்கசெய்தி



மாதகலை ஜனனபதியாகக்கொண்டவரும், அவ்வூர் அர்ச். தொம்மைஅப்போஸ்தலர்ஆலய சக்கிறிஸ்தாமாயிருந்து காலஞ்சென்ற திரு. தொம்மைப்பிள்ளையின் கனிஷ்டபுதல்வரும், வங்காலை, மன்னுர், மாதோட்டப்பகுதியில் பிரபலவியாபாரியாய் இருந்தவரும், திரு. பெனடிக்ற், திரு. மரியதாசன் இராசரத்தினம், திருமதி அந்தோனிப்பிள்ளை, மேரிதிரேசா ஆகியோரின் பிரிய தந்தையுமான திரு. தொ இராயப்பு இராசையா அவர்கள் தமது 79-ம்வயதில் சென்ற 21-10-58 செவ்வாய்க்கிழமையன்று பரலோகபிராப்தியாயினர். இவர் 27-12-1879-ல்ஜனனமானவர்.

இவரின்பூதஉடல் மறுநாட்சாயந்தரம் 4-30மணியளவில் இரட்டைவெண்பரிகள் பூட்டியஇரதத்தில்வைத்து, கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம், வண. பி. எஸ். மரியதாசன், வண. எல். ஏ. சிங்கராயர்எனுங்குரவர்கள் துக்கசங்கீதம்பாடிச்செல்ல, பாண்டுவாத்தியத்தின் துக்ககீதம்முழங்க. பெரும்திரளான மக்களும், இனசனர், சிநேகிதர், சங். கன்னியரும் அணிவகுத்துச்செல்ல, அர்ச். தொம்மைஅப்போஸ்தலர்ஆலய சேமக்காலைபோய்ச் சேரலாயிற்று. ஈற்றில் இளவாலை, அர்ச். என்றிக்கப்பர் கல்லூரி அதிபர் வண எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம்கூறிநிற்க, மக்கள்பிரலாபமத்தியில் பூதஉடல் புதியஓர்கல்லறையில் பூமதானம்செய்யப்படலாயிற்று.


"மரித்த விசுவாசியின்ஆன்மா சர்வேசுரனுடைய இரக்கத்தினுல் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது"

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்தமரியாயின் மாசற்றஇருதயமே, பாவிகளுக்கு அடைக்கலமே எங்கள் பேரில் இரக்கமாய்இரும்என்ற உன்னத வாக்கியங்களைத் தினமும்உச்சரித்து மன்ருடியதாலும், அர்ச். றீத்தம்மாள், அர்ச். அன்னம்மாள், அர்ச் அந்தோனியார்இவர்களின் விசேஷஉதவியாலும் நான்கேட்ட மன்ருட்டுக் கிடைக்கப்பெற்றேன். இன்னும் நான்கேட்டுக்கொண்டிருக்கும் சில சகாயங்களையும் பெற்றுத்தருப்படி பக்தி வணக்கத்துடன் மன்ருடுகிறேன்.

வி. எஸ். பெர்னுண்டோ
யாழ்ப்பாணம்.

### திரு. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் அமரநினைவு



பிறப்பு: 4-3-1897 இறப்பு: 3-6-1958

- இற்றைக்கு ஆறுமாதங்களின் முன் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றீர்கள்.
- இவ்வளவுவிரைவில்எம்மைவிட்டுப் பிரிவீர்களென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை
- உங்கள் திடீர்ப்பிரிவு சகித்தற்கரியது,
- உள்ளத்தைப் பிளந்துவிட்டது உங்கள்மறைவு.
- உங்கள் நித்திய அமைதிக்காக நாங்கள்நிதமும் இறைவனை வேண்டுவோம்.
- மதுரமான உங்கள்நினைவு எம் மனதை விட்டகலா.
- சீவியத்தில் உங்களை என்றென்றும் மறவோம்.

இழந்து துயருறும்
மனைவியும், உற்ருரும்.
வியாங்கொடைரோட்,
மினுவாங்கொடை.

ஐக்கிய அமெரிக்கதேச போனிக்ஸ்நகரிலுள்ள அர்ச். அக்னேஸ் கலாசாலையில் படித்துவருகின்ற 11வயதுடைய திமோத்தி பாக்வெல்எனும் மாணவன் ஒருவன் லூர்துதிருப்பதியில் பூசைக்குஉதவிசெய்ய வேண்டுமென ஆசித்தான். அவனுடைய தீராத ஆசையைத் தீர்த்துவைக்கக் கடைசியாகத் திருமதிவில்லியன் சொம்மர் என்ற அவனின்பாட்டி முன்வந்தாள். சமீபத்திலே அரிசோனுஎனும் கப்பலில் லூர்துபதிசென்ற யாத்திரைக்கோஷ்டியுடன் இருவரும்சேர்ந்துகொண்டார்கள். பாட்டி லூர்துபதியைத்தரிசித்தாள். அவளின்பேரன் அப்பதியைத் தரிசித்துப் பூசைக்குஉதவிசெய்தான்.

உலகின் மகாப்பெரிய சிறைத்தண்டனைமுகாம் வடருஷியாவிலுள்ள வோர்குட்ரா எனுமிடத்திலே இருந்துவருகின்றது. இதிலே 2,23,000 கைதிகளுக்குமேல் 12,000 ருஷியபோர்வீரர்களால் காவல்செய்யப்பெற்று, வோர்குட்ராவிலுள்ள 40சுரங்கங்களில் வேலைசெய்துவருவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 6-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org